Not for sale

செப்டம்பர் - அக்டோபர் 2012

தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom



## வசனங்களிலுள்ள இனிமையான சங்கீதங்கள்

தேனிலும் மதுரமானது • தெய்வீக சிந்தையின் சிறப்பு • சங்கீதங்களில் காணப்படும் சாபங்கள் • சங்கீதம் 61 • வரவிருக்கும் ஆசீர்வாதங்கள்

சங்கீதங்களை குறித்து லூத்தர் • நீதிமான்களை ஆசீர்வதித்தல் • இரவின் கீதங்கள்

வசனங்களிலுள்ள இனிமையான சங்கீதங்கள்

# ஆதியிலே



பரிசுத்தமான வேதாகமத்தில் சங்கீதப் புஸ்தகம் ஒரு தனித்துவமான பகுதியாக உள்ளது. ஆறுதலுக்கும் நம்பிக்கைக்கும் மற்றும் சில நேரங்களில் அருமையான ஆவிக்குரிய வாசிப்புக்கும் நாம் சங்கீதப் புஸ்தகத்தைத் திருப்புவதுண்டு. பரலோக ஞானத்தைப் பெறவும், தெய்வீக வழிநடத்துதலை அடையவும் நாம் சங்கீதங்களை அதிகமாக நம்புகிறோம். அதில் மனவேதனையுள்ள ஆத்துமாக்களின் வெளிப்பாடுகளையும் அவைகளினால் அவர்கள் விசுவாசத்தில் வளர்ச்சியடைந்து தேவனிடத்தில் நெருங்கி இறுதியாக தீமையை, நன்மை மேற்கொள்வதான காரியங்களைக் குறித்தும் அதில் காண்கிறோம்.

சங்கீதம் 23;1, 6 - "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்." "என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்" என்ற ஆறுதலான வார்த்தைகளை சங்கீதத்தில் காண்கிறோம். நம்முடைய இருதயங்கள் மற்றும் சிந்தனைகளில் இப்படிப்பட்ட அருமையான பொக்கிஷங்கள் ஆழமாகப் புதைந்திராவிட்டால் நாம் எவ்வளவு தரித்திரர்களாய் இருப்போம்?

"தேனைக் காட்டிலும் மதுரமானது" என்ற நம்முடைய துவக்கப்பாடம் 119-ம் சங்கீதத்தைக் குறித்து விவரிக்கிறது. (வரிகளின் முதல் அல்லது கடைசி எழுத்துக்களைக் கூட்டும்போது உருவாகக்கூடிய கவிதை) இதுவே சங்கீதங்களில் மிகப் பெரிய சங்கீதமாகும். 22 பகுதிகளைக் கொண்டுள்ள இந்த சங்கீதம், தேவனுடைய வார்த்தைகளையும், அவருடைய பிரமாணங்களையும், சட்டங்களையும் கனப்படுத்துகிறது. நமக்காக இதனுடைய 22 குணலட்சணங்கள் எபிரெய மொழியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தெய்வீக சிந்தையின் வழிப்பாடு என்ற அடுத்த கட்டுரையில் 139-ம் சங்கீதத்தின் ஒரு ஆழமான விவரங்களைக் காணலாம். இதில் தேவனுடைய மகிமையையும், தேவனுக்குள் நம்முடைய நம்பிக்கை களையும், ஆசீர்வாதங்களையும் குறித்து விவரிக்கப்படுகிறது.

"சங்கீதங்களில் காணப்படும் சாபங்கள்; இவர்களை அன்பான தேவனோடு மீண்டும் ஒப்புரவாகுதல்" என்ற தலைப்பு, வருங்காலத்தில் அநீதியான கிரியைகள் மங்கி தேவனுடைய கிரியைகள் அதிகமாகப் பிரகாசிக்கும் என்று விவரிக்கிறது.

"சங்கீதம் 61 - ஒரு விமர்சனம்" என்ற தலைப்பு, பிற்காலத்தில் மிகக் கடுமையான உபத்திரவங்களை எதிர்நோக்கக் கூடியவர்களுக்கு இசைவாய் இருப்பதைக் காண்பிக்கிறது. "தேவனே, என் கூப்பிடுதலைக் கேட்டு, என் விண்ணப்பத்தைக் கவனியும், என் இருதயம் தொய்யும்போது .... எனக்கு எட்டாத உயரமான கன்மலையில் என்னைக் கொண்டுபோய்விடும். "இப்படிப்பட்ட சில அனுபவங்களை நாம் பெற்றிருக்கிறோமா? நிச்சயமாக இந்த பாடத்தை எழுதின இந்த ஆசரியர் பெற்றிருக்கிறார்.

"வருங்கால ஆசீர்வாதங்கள்" என்ற தலைப்பு நாம் நன்கு அறிந்த 90-வது சங்கீதத்தையும், அதிலுள்ள கிறிஸ்துவின் இராஜ்யத்தில் பிரகாசிக்கும் நாளைக்குறித்த தீர்க்கதரிசனமான பாடங்களைக் கண்ணோக்குகிறது. அப்பொழுது இக்காலத்து இருள் துரத்தப்பட்டு நீதியின் சூரியனுடைய வெளிச்சம் முழுமையாகப் பிரகாசிக்கும்.

"நீதிமான்கள் ஆசீர்வதிக்கப்படுதல்" என்ற தலைப்பு சுவிசேஷத்தை சில்லரை வியாபாரமாக்கி மாயமான கோரிக்கைகளைப் பற்றிக் கொண்டிருக்கும் ஜனங்களிடத்தில் வரக்கூடிய தேவனுடைய ஆசீர்வாதங்களைக் குறித்து இப்பாடம் விவரிக்கிறது.

நம்முடைய வாசகர்களுக்கு இந்த பிரதி உற்சாக மூட்டக்கூடியதாக இருக்கும் என்று நாம் நம்புகிறோம்.

**செப்டம்பர்-அக்டோபர் 2012**


**தேனிலும் மதுரமானது**
ஏறுமுக சங்கீதங்கள், சங்கீதம் 119 — 37

**தெய்வீக சிந்தையின் சிறப்பு** — 40
ஆய்வு செய்யப்பட்ட ஓர் சங்கீதம், சங்கீதம் 139

**சங்கீதங்களில் காணப்படும் சாபங்கள்** — 45
அன்பான தேவனோடு இவர்களை மீண்டும் ஒப்புரவாக்குதல்.

**சங்கீதம் 61** — 49
"என் கூப்பிடுதலை கேட்டு" வசனங்கள் வாரிலான ஆய்வு

**வரவிருக்கும் ஆசீர்வாதங்கள்**
சங்கீதம் 90

**சங்கீதங்களை குறித்து லூத்தர்** — 54
தேனிலும் மதுரமானது

**நீதிமான்களை ஆசீர்வதித்தல்** — 55
நீதிமொழிகளும் சங்கீதங்களும்

**இரவின் கீதங்கள்** — 59
சிறப்பான நம்பிக்கைகளில் களிக்கூறுதல்

**தீர்க்கதரிசனத்தில் இன்று** — 61



# தேனிலும் மதுரமானது

"உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள், என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும்."(சங்கீதம் 119:103)

**Ken Osterman**

சங்கீதங்கள் அனைத்தும் குறிப்பான பாடங்கள் அல்லது செய்திகளைக் கொண்டிருக்கிறது, சில செய்திகள் தெளிவாகவும், சில செய்திகள் தெளிவற்றதாகவும் காணப்படுகிறது. அநேக வசனங்கள் தேவனைத் துதித்து அவரிடத்தில் விண்ணப்பிக்கக்கூடியதாகக் காணப்படுகிறது. அப்படிப்பட்ட சில சங்கீதங்களை (120-134) எருசலேமிலுள்ள ஆலயத்திற்குச் சென்ற ஆசாரியர்கள் மற்றும் பயணிகள் பாடிக்கொண்டு சென்றனர். மற்ற சில சங்கீதங்கள் (110) தீர்க்கதரிசனத்தையும் அல்லது சத்தியங்களைக் கொண்டுள்ள தொடர் தீர்க்கதரிசனங்களாகவும் காணப்படுகிறது. (22) சங்கீதம் 51, உண்மையான மனம் வருந்துதலை அறிக்கையிடுகிறது. மற்றவைகள் கவிதை நடையில் காணப்படுகிறது. இவைகளின் அடிப்படையில் நாம் சங்கீதங்களைக் கண்ணோக்காவிட்டால் அதை வாசிக்கும்போது ஏற்படும் சிறு மாறுதல்களும் குழப்பத்தை உண்டாக்கி அதின் உண்மையான நோக்கம் தொலைந்துவிடும்.

அநேக சங்கீதங்கள் மனப்பாடம் செய்வதற்கு எளிதாக இருக்கும் - சில நேரங்களில் அவைகள் நம்முடைய தனிப்பட்ட ஆராதனையிலும் - ஜெபங்களிலும் பங்குப்பெறும். இப்படியாக சங்கீதங்களை மனப்பாடம் செய்வது ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட காரியமாகும். வேதாகமத்தை எல்லா நேரங்களிலும், எல்லா இடங்களிலும் எடுத்துரைப்பதற்குப் பயனுள்ளதாக இருக்கும். ஏனெனில், என்னை உற்சாக மூட்டிய அழகான சங்கீதங்களை பல வருடங்களுக்கு முன் நானும் மனப்பாடம் செய்தேன். (19, 23, 27, 46) ஆயினும் மனப்பாடம் செய்த வரிகளை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவருவதைக் காட்டிலும், மனப்பாடம் செய்த வசனங்களை மறப்பது.எளிது.

ஆனால் இப்பொழுது சங்கீதங்களை ஒவ்வொன்றாக மனப்பாடம் செய்வதைக் காட்டிலும், அவைகளுக்குள் இருக்கக்கூடிய அர்த்தங்களைப் புரிந்து கொள்வது ஏற்றதாய் இருக்கும். எடுத்துக்காட்டாக, "கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார்." என்னுடைய ஆண்டவரும் கர்த்தருமாய் இருப்பவர் நிச்சயமாக என்னைப் பராமரித்து எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் என்னை வழி நடத்தி, (நன்மையான இடங்கள், கடுமையான வழிகள்) நிச்சயமாக இறுதியில் இலக்கை அடையச் செய்வார்.

**இரண்டுவிதமான ஒரே சித்திரங்கள்**

119-ம் சங்கீதத்தின் ஆசிரியரைப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் 19-ம் சங்கீதத்தோடு ஒப்பிடுகையில், சில குறிப்பான ஒற்றுமைகளையும், சில குறிப்பான முரண்பாடுகளையும் காணலாம். 19-ம் சங்கீதத்தின் முதல் ஐந்தாறு வசனங்கள் தனி தோற்றத்தை உடையதாகக் காணப்படுகிறது. அதற்கு எதிரிடையாக 119-ம் சங்கீதத்தில் உள்ள வெறும் ஐந்து அல்லது ஆறு வசனங்கள் மட்டுமே 19-ம் சங்கீதத்திற்கு எதிராகக் காணப்படுகிறது.

19-ம் சங்கீதத்தில் யேகோவா தேவனுடைய மிக அருமையான மூன்று குணங்களை மிக அழகாக பிணைக்கப்படுவதைக் காண்பிக்கிறது. (அவருடைய மகிமை, அவருடைய பரிபூரண பிரமாணம், தாவீதின் விண்ணப்பம்) தேவனுடைய பரிபூரணமான பிரமாணம் தேனிலும் மதுரமானது என்ற எடுத்துக் காட்டுவதே 19-ம் சங்கீதத்தின் முக்கியமான அம்சமாக இருக்கிறது. (7-11) அதேபோல, "கர்த்தருடைய பிரமாணங்கள்; 119-ம் சங்கீதம் முழுவதிலும் தொடர்ச்சியாகக் காணப்படுகிறது. கிட்டத்தட்ட ஒவ்வொரு வசனமும் நம்முடைய கவனத்தை தேவனுடைய பூரணமான பிரமாணத்திற்கு திசை திருப்புகிறது. சந்தேகத்திற்கு இடமின்றி, தேவனுடைய பிரமாணத்தின் முக்கியத்துவத்தை சங்கீதக்காரன் நன்கு உணர்ந்து, அதை தொடர்ந்து புரிந்து கொண்டு அதின்படி வாழ முயற்சித்தார் என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம். புரிந்து கொள்ளுதலுக்கும் உதவிக்கும் ஏறெடுக்கப்பட்ட ஒரு தாழ்மையான விண்ணப்பத்தோடு இரண்டு சங்கீதங்களும் முடிவு பெறுகிறது.

119-ம் சங்கீதத்திலுள்ள 103-ம் வசனம் மிக அருமையாக விவரிக்கப்பட்டுள்ளது. "உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள், என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும்." இக்காரியம் 19-ம் சங்கீதம் 10-ம் வசனத்தில் எதிரொலிக்கிறது. "அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது." இவ்விரண்டு வசனங்களிலும் குறிப்பிடப்பட்ட பசும்பொன் இவைகளை ஒன்றாக இணைக்கின்றது. (சங் 119:72, 127)

மதுரமான தேனுக்கும், பசும் பொன்னுக்கும் ஒப்பிடப்படும் தேவனுடைய பரிபூரண பிரமாணங்கள், இந்த நீண்ட சங்கீதத்திற்குள் ஆழமாக மறைந்திருக்கிறது. இதில் எது முக்கியமானது? 119-ம் சங்கீதத்தில் காணப்படும் மூன்று அருமையான காட்சியளிக்கும் சித்திரங்கள் அல்லது 173-ம் வசனங்களில் இந்த மனுக்குலத்தைச் சார்ந்த காரியங்களை மீண்டும் மீண்டும் கூறுவதா?

இந்த சங்கீதத்தின் சாராம்சத்தைப் பார்ப்பதற்கு முன் அதின் மேலோட்டமான சில காரியங்களைக் காணலாம். 119-ம் சங்கீதம் 176 வசனங்களைக் கொண்டதாகவும், 22 பத்திகளையும், ஒவ்வொரு பத்திகளும் 8 வசனங்களையும் கொண்டுள்ளது. எபிரெய அகராதி வரிசையில் உள்ள ஒவ்வொரு எழுத்துக்களும், இந்த சங்கீதத்தின் ஒவ்வொரு பத்திக்கு மேலும் வரிசையாகக் காணப்படுகிறது. சங்கீதக்காரருடைய உள்ளான எண்ணங்களைப் புரிந்து கொள்வதற்கு ஒருவேளை இது ஒரு குறிப்பாகக் கூட இருக்கலாம். எழுத்து மற்றும் வாய்மொழியினால் தொடர்பு கொள்வதற்கு அகராதி வரிசையில் காணப்படும் ஒவ்வொரு எழுத்துக்களும் ஒரு அடிப்படைக் கூறாக உள்ளது. எழுத்துக்கள் வார்த்தைகளை உருவாக்குகிறது. வார்த்தைகள் வாக்கியங்களை உருவாக்குகிறது. வார்த்தைகளும் வாக்கியங்களும் ஒரு செய்தியை உருவாக்கி, சிந்தனைகளையும், உணர்வுகளையும், நோக்கங்களையும் தெரிவிக்கிறது.

**விசுவாசமும் நியாயமும்**

எபிரெய அகராதி வரிசை இடது புறத்திலிருந்து வலது புறமும், மேலிருந்து கீழ்வரை வாசிக்கக்கூடியதாய் இருக்கிறது. (ஆயினும், மேல் காணும் பாடத்தில் நம்முடைய வாசகர்களுக்கு சௌகரியமாக எபிரெய வார்த்தைகள் இடது புறத்திலிருந்து வலதுபுறம் எழுதப்பட்டிருக்கிறது.) 119-ம் சங்கீதத்தின் வார்த்தைகள் (மற்றும் வேதாகமம்), செய்திகளை அறிவிக்கக்கூடிய மனித ஆசரியர்களின் எழுத்துப் பூர்வமான வெளிப்பாடாய் இருக்கிறது. இங்கு நம்முடைய விசுவாசமும் நியாயமும் சந்திக்க வேண்டும். மனுஷரால் எழுதப்பட்டவைகள், தேவ ஆவியினால் எழுதப்பட்டவைகள் என்று நம்பத்தக்க விசுவாசம் நம்மிடத்தில் உண்டு. நம்முடைய வாழ்க்கையை அந்த செய்திக்கு இசைவாக வாழ வேண்டும் என்ற விசுவாசமும் நமக்கு உண்டா? தேவன் தம்முடைய காலம் மற்றும் நோக்கத்திற்கு இசைவாக சகல காரியங்களையும் பேசுகிறார். (சங் 19:1-4; 1 பேது 1:10-12; தானி 12:9, 10; ஏசா 55:11) நாம் இவைகளை ஏற்றுக் கொள்கிறோமா? இதற்கு இசைவாக நாம் செயல்படுகிறோமா? தேவனால் நாம் இயக்கப்படுவதற்கு நாம் அனுமதிக்கிறோமா? நாம் நல்ல சிந்தையில் இவைகளைப் பெற்றுக் கொண்டால் தேவனுடைய அழைப்பையும், வழிநடத்துதலையும் (திசைத்திருப்புதல்) உணரலாம். இப்படிப்பட்ட அழைப்புக்கும், வழி நடத்துதலுக்கும் நாம் எவ்வாறு பதிலளிக்கிறோம்? நாம் தேவனுடைய வார்த்தைகளை (செய்தி) வாசிக்கையில் நாம் நேரடியாக ஒருவரிடம் பேசும்போது, கேட்கக்கூடிய தொனியையும், வார்த்தையையும் நாம் கேட்பதில்லை. அதைப்போல, நாம் தேவனோடு கிறிஸ்துவின் வழியாக தொடர்பு கொள்ளும்போது, வார்த்தைகளையும், தொனியையும் கேட்பதில்லை. தெய்வீகத்திற்கும் மனுஷருடைய இயல்புகளுக்கும் இப்படிப்பட்ட குறிப்பான வித்தியாசங்கள் உண்டு. நம்முடைய மனித இயல்பு பாவத்தினால் பாழாக்கப்பட்டிருக்கிறது. நாம் எந்த அளவுக்கு இயலாமையின் நிலையில் இருக்கிறோம் என்பதை புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு நம்முடைய நிலைமை உள்ளது.

அநேக கிறிஸ்தவர்கள் சத்தியத்தில் தொடு உணர்வைப் பெற்றவுடன், திடீர் என்று தங்களுடைய வாழ்க்கை ஒரு புதிய பிரவேசத்தைக் கண்டதாக எண்ணுகிறார்கள். ஒரு சத்தியம் அவர்கள் மேல் உதித்தது. ஆனால் அவர்கள் எந்த சத்தியத்தையும் கேட்கவில்லை. மாறாக ஏதோ ஒன்று அவர்களைத் தொட்டது. தேவன் அவர்களிடம் பேசினார். அதை புரிந்து கொண்ட அவர்கள் மெய்சிலிர்த்தனர். புதிய நம்பிக்கைகள் அந்த வழிநடத்துதலின் கீழ் காணப்பட்டது. அதற்கு பின் பெறக்கூடிய ஒவ்வொரு அனுபவமும் முன்னேறி செல்வதற்கான ஒவ்வொரு வளர்ச்சிக்குரிய வாய்ப்பாக நம்முடைய இருதயமும், சிந்தையும் உணர்ந்தது. கிறிஸ்தவ வாழ்க்கை உலகத்தையும், மாம்சத்தையும், சாத்தானையும் எதிர்த்துப் போராடக் கூடியதாக இருக்கிறது. ஆகவே நம்மை சரியாக வழிநடத்துவதற்கும் நமக்காக வாதாடுவதற்கும் சிறப்பான ஆலோசனை கர்த்தர் தேவைப்படுகிறார். இப்படிப்பட்ட உதவியினால் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்களைக் கொண்டு கட்டிடங்களைக் கட்டுவதற்கான வாய்ப்புகளாக நாம் பெற்ற அனுபவங்கள் பயனளிக்கிறது. (1 கொரி 3:11-13)

இப்படியிருக்க 119-ம் சங்கீதத்தின் செய்தி என்ன? அதற்குள் இருக்கும் பாடம் என்ன? அதின் நோக்கம் என்ன? தேவனுடைய பிரமாணங்கள் தேனிலும் மதுரமானது என்று சொல்லப்படும் காரணம் என்ன? நிச்சயமாக தேவனால் வழி நடத்தப்பட்ட அந்த ஆசிரியரின் சிந்தையில் ஏதோ ஒரு காரியம் இருந்திருக்க வேண்டும். ஏதோ ஒரு காரியம் ஆசிரியருடைய இருதயத்தில் ஆழமாக செதுக்கப்பட்டு இருப்பதை இந்த சங்கீதத்தில் மீண்டும் மீண்டும் வரும் வார்த்தைகள் நமக்குக் காட்டுகிறது. அவர் தேவனுடையவர் என்றும், தேவனால் வழிநடத்தப்படுகிறவர் என்றும் தெளிவான குறிப்பை ஒரு அடையாளம் வெளிப்படுத்துகிறது.

அவர் வாழ்க்கையில் தோல்வி அடைந்து, பிரச்சனைகளிலிருந்து விடுபட்டு அவருடைய பலவீனங்களை உணர்ந்தபோது, ஒருவேளை அவருடைய வாழ்க்கையின் ஒரு புதிய துவக்கத்தை ஒரு நொடியில் அனுபவித்திருக்கலாம்.

அந்த நொடிப்பொழுதில் தேவனுடைய பிரமாணத்தின் ஒரு கோட்பாட்டை உணர்ந்தார். அந்த நொடிப்பொழுதில் தாழ்மை உள்ளவர்களுக்கு தேவன் கிருபையளிக்கிறார் என்பதையும் உணர்ந்தார். மற்றொரு இக்கட்டான சூழ்நிலையிலும் தேவன் அவருக்கு இரக்கம் காண்பித்தார். அதற்கு பின்பு மற்றொரு அனுபவம்... இந்த அனுபவங்கள் தொடர்ச்சியான ஒரு அனுபவங்கள் அல்ல. மாறாக ஒவ்வொரு புதிய அனுபவங்களும் தேவனுடைய பரிபூரண பிரமாணத்தையும் தாழ்மையுள்ளவர் களிடத்தில் தேவன் இரக்கம் அளிக்கிறார் என்பதையும் மீண்டும் மீண்டுமாக உறுதிப்படுத்தப் பட்டது. இப்படிப்பட்ட பல அனுபவங்கள் ஒன்றிணைந்து - உன்னத காரியங்களைச் செயல்படுத்துவதற்கான ஒரு பாத்திரம் உருவானது - அர்த்தமுள்ள வாழ்க்கை. (2 தீமோ 2:20, 21)

**கற்றுக்கொள்வதற்கான அஸ்திபாரம்**

ஒரு மொழிக்கு அகராதி வரிசையிலுள்ள எழுத்துக்கள் மூலக்கூராக இருந்து கற்றுக் கொள்வதற்கு அஸ்திபாரமாக இருப்பதுப்போல, நம்முடைய அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் அனுபவங்கள் ஆவிக்குரிய கற்றுக் கொள்ளுதலுக்கான ஒரு அஸ்திபாரமாய் உள்ளது. ஒரு கிறிஸ்தவ வாழ்க்கையின் அனுபவங்களே தேவன் நேரிடையாக தொடர்பு கொண்டு நமக்குப் போதிக்கவும், அதற்கு இசைவாக நம்மை உருவாக்குவதற்குமான வழியாகும்.

நமது பல்வேறு அனுபவங்களில் நாம் எவைகளைக் கற்றுக் கொள்கிறோம்? இந்த அனுபவங்கள் எல்லா மனுஷருக்கும் பொதுவானது. நமக்கு அன்பை கற்றுக் கொடுப்பதற்கு இது பயன்படுத்தப்படுகிறது. (1 கொரி 10:13) ஆயினும் சில அனுபவங்கள், சில சிறப்பான நோக்கங்களுக்காக அனுமதிக்கப் படுகிறது. சில அனுபவங்கள் நாம் அதிகமான கனிகளைக் கொடுக்கும்படியாக நம்முடைய வளர்ச்சிக்காகவும், ஒழுங்குக்காகவும் களை நறுக்கப்படக் கூடியதாய் இருக்கிறது. (எபி 12:11; யோவ 15) மற்றும் சில அனுபவங்கள் நம்முடைய கிரியைகளை சோதித்து சுத்திகரிப்பதற்காக அனுமதிக்கப்படுகிறது. (1 கொரிந்தியர் 3:11-15)

ஆனால் எந்த ஒரு அனுபவமும் தேவனுடைய பரிபூரணமான பிரமாணத்திற்குப் புறம்பாக இருப்பதில்லை. நண்பர்களை நண்பர்களோடும், எதிரிகளோடும் இரவும் பகலும் விருந்து மற்றும் பஞ்சத்திலும் மேலும் பாவத்திலும் எதிர்நோக்கக் கூடிய ஒவ்வொரு அனுபவங்களும் ஒரு விசேஷித்த நோக்கம் இருந்ததாக இந்த ஆசிரியர் உணருகிறார். அவருடைய அனுபவங்களை சந்திக்கையில் ஒவ்வொரு நொடியிலும் அவர் தேவனுடைய பரிபூரண பிரமாணம் கிரியை செய்ததைக் காணமுடிந்தது. இக்காரியம் அவருடைய இருதயத்திற்கு மனமகிழ்ச்சியும், ஆறுதலும் அளித்தது.

ஒருவர் 119-ம் சங்கீதத்தை வாசிக்கும்போது, கீழ்க்காணும் கருத்துக்களைக் காணலாம்.

(1) தேவனுடைய பிரமாணம் அவருடைய வார்த்தை, அவருடைய கற்பனைகள் மற்றும் அவருடைய சட்டங்கள் பரிபூரணமானவைகள். நாம் எப்படிப்பட்ட கேள்விகள் எழுப்பினாலும், சந்தேகத்திற்கு இடமின்றி நம்முடைய தந்தையின் வழியே மிகச் சிறந்தது. நாம் எப்போதும் சந்தேகப்படக்கூடாது.

(2) நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு அனுபவங்களிலும், குடும்பம், அயலகத்தார், நண்பர்கள், எதிரிகள், வியாதிகள் மற்றும் உடல் நலன்கள் சகலத்திலும் தேவனுடைய கோட்பாடுகளை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும். நித்தமும் நாம் பெறக்கூடிய அனுபவங்களை மறுபடியும் ஆலோசித்து, அதற்கு இசைவாக நடத்த வேண்டும்.

(3) தேவனுடைய நோக்கமும் சித்தமும் அவருடைய பிரமாணங்களும் அதிகமதிகமாகக் காணப்படும் அளவுக்கு அவைகளை நம்முடைய அனுபவங்களில் நாம் கேட்டு தியானித்து கற்றுக் கொள்ள வேண்டும்.

(4) நம்முடைய வாழ்க்கையின் இலக்குகள், தேவனுடைய கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பதற்கு தடைசெய்யும் வகையில் காணக்கூடாது. எதிர்ப்புகள் தொடர்ந்து செயல்படுகிறது. அவைகளை நாம் சரியான வழியில் எதிர் நோக்கினால் நம்முடைய பிதா நம்மை சுத்திகரிப்பார். அதை கற்றுக் கொள்ளுதலுக்கும் தேவனுடைய நன்மைகளை மற்றவருக்கு சாட்சியாக அறிவிப்பதற்கும், ஒவ்வொரு அனுபவங்களும் நமக்கு வாய்ப்பு அளிக்கிறது.

(5) நடந்து கொண்டிருக்கும் அனுபவங்களையும் - நிறைவுராத வேலையின் செயல்பாடுகளையும் இறுதி பத்தி சுருக்கமாகக் குறிப்பிடுகிறது. இறுதியான வசனம் மனத்தாழ்மையையும் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறது.

(6) 119-ம் சங்கீதத்தில் சில வார்த்தைகள் மீண்டும் மீண்டுமாக எழுதப்பட்டு இருந்தாலும், அவைகள் வீணாக எழுதப்படவில்லை. நம்முடைய பிதாவாகிய தேவனுடைய பரிபூரணமான பிரமாணங்களைக் கேட்டு, அறிந்து அதற்கு ஏற்றவாறு நடக்க வேண்டும் என்று விரும்புபவர்கள், முதலில் அவர்களின் குறைப்பாடுகளை நன்கு உணர்ந்தவர்களாக எப்பொழுதும் குமாரனாம் இயேசுவின் வழியாக ஜெபத்தின் மூலம் தேவனை தேட வேண்டும் என்ற தெளிவான செய்தியை நாம் இந்த சங்கீதத்தில் காணலாம்.

ஆய்வு செய்யப்பட்ட ஓர் சங்கீதம்

# தெய்வீக சிந்தையின் சிறப்பு

"என் நாவில் சொல் பிறவாததற்குமுன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர்." (சங்கீதம் 139:4)



**Donald Holliday**

சங்கீதம் 139-ம் - "கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர். என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர்; என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்; என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும். என் நாவில் சொல் பிறவாததற்குமுன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர். முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை என்மேல் வைக்கிறீர். இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது. உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும். இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும். உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது; இரவும் பகலைப்போல வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி. நீர் என் உள்ளிந்திரியங்களைக் கைக்கொண்டிருக்கிறீர்; என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர். நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது. தேவனே, உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள்; அவைகளின் தொகை எவ்வளவு அதிகம். அவைகளை நான் எண்ணப்போனால், மணலைப்பார்க்கிலும் அதிகமாம்; நான் விழிக்கும்போது இன்னும் உம்மண்டையில் இருக்கிறேன். தேவனே, நீர் துன்மார்க்கனை அழித்தீரானால் நலமாயிருக்கும்; இரத்தப்பிரியரே, நீங்கள் என்னை விட்டு அகன்றுபோங்கள். அவர்கள் உம்மைக் குறித்துத் துன்மார்க்கமாய்ப் பேசுகிறார்கள்; உம்முடைய சத்துருக்கள் உமது நாமத்தை வீணாய் வழங்குகிறார்கள். கர்த்தாவே, உம்மைப் பகைக்கிறவர்களை நான் பகையாமலும், உமக்கு விரோதமாய் எழும்புகிறவர்களை அருவருக்காமலும் இருப்பேனோ? முழுப்பகையாய் அவர்களைப் பகைக்கிறேன்; அவர்களை எனக்குப் பகைஞராக எண்ணுகிறேன். தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்."என்ற இந்த சங்கீதத்தில் தாவீதின் துவக்க வார்த்தை, ஒருவர் தன்னை ஆய்வு செய்வதற்கு வழி நடத்துகிறது.

இந்த சங்கீதம் நிச்சயமாக தேவனுடைய அற்புதமான வெளிப்பாடுகளையும், அவர் தம்முடைய ஜனங்களுக்காக கொண்டுள்ள அக்கறையையும் தெளிவாகக் காட்டுகிறது.நம்மை அற்புதமாக சத்தியத்தினால் அழைத்து தெய்வீக இரகசியங்களுக்குள் வழிநடத்திய ஆச்சரியத்தின் நெருக்கமான அறிக்கையாக இருக்கிறது.

இப்படியாக, இரகசியங்களை சந்திப்பதின் காரணம் என்ன? ஆண்டவரே அற்புதமாய் இருக்கக்கூடிய இந்த களிமண்ணில் உங்களுக்கு மிகுந்த ஆர்வமுண்டா? என் தேவனே, நான் எப்படிப்பட்டவன்? மேலும், இவர்களில் யார் உம்முடைய ஜனங்கள்? தெய்வீக அன்பினால், உங்களுக்கு என்ன கோரிக்கைகள் உண்டு? நீர் எங்களை சிருஷ்டித்ததினால் நாங்கள் எங்கள் ஜீவனோடு நிற்கிறோம். நீர் எங்களை சிருஷ்டித்தப்படி வாழ்கிறோம். நாங்கள் உம்முடைய சமூகத்தில் நிற்கிறோம். ஏனென்றால், நாங்கள் அங்கு நிற்க

வேண்டும் என்று நீர் விரும்பினீர். இது தாவீதின் உதடுகளினால் பேசப்பட்ட பரிசுத்த ஆவியின் வார்த்தைகள். இவைகளைப் புரிந்து இருதயத்துக்குள் வாசிக்க தேவனுடைய அதே பரிசுத்த ஆவி தேவைப்படுகிறது.

நம்முடைய வழியில் நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியில், பிதாவின் அன்பையும், அக்கறையும், அவருடைய நெருக்கத்தையும் புரிந்து கொள்வதற்கு இந்த சங்கீதம் காணப்படுகின்றது. கேட்கத்தகாது என்று நாம் நினைக்கும் கேள்விகளுக்குப் பதில் உண்டு. ஆண்டவரே! நீர் எவ்வளவு நெருக்கமாய் இருக்கிறீர்? உண்மையில், நீர் என்னில் கவனம் செலுத்துகிறீரா? நீர் மட்டுமே காணக்கூடிய என்னுடைய சூழ்நிலைகளில் நான் என்னுடைய செயல்களையும், சிந்தைகளையும் குறித்து தனிப்பட்ட முறையில் எதிர்பார்ப்புகள் உண்டா? ஒரு தந்தை தன் பிள்ளையின் எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்து, ஆறுதல் அளித்து, அரவணைப்பதுபோல, உம்முடைய அன்பு, என்னைச் சுற்றியிருக்கிறதா? இந்த சங்கீதம் மிகத் தெளிவாகக் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கிறது. ஒரு குழந்தையை தாய் மறந்தாலும் நான் உன்னை மறவேன். (ஏசாயா 49:15)

மிகத் தாழ்மையான பரிசுத்தவான்களின் வாழ்க்கையில் செயல்படும் தெய்வீகமான காரியங்கள் மிக அற்புதமான பரலோக சத்தியத்தின் களஞ்சியங்களை வெளிப்படுத்துகிறது. தனித்துவம் வாய்ந்த தெய்வீக வல்லமை, மனுஷனுடைய சுதந்தரத்தோடு இணைக்கப்படுவது வியப்பூட்டும் சமநிலையாக உள்ளது. தேவன் வாசம் செய்யும் எல்லையில்லாத ஆளுகை மற்றும் வருங்காலத்தைக் குறித்தும் எல்லையில்லா அறிவு நம்மை வியப்பூட்டுகிறது.நாம் வாழ்வதும் அசைவதும், வருங்காலங்களும், நிகழ்காலங்களும் - அனைத்திலும் தேவ ஆவி அசைவாடி கொண்டிருக்கிறது. இந்த பக்தியுள்ள உண்மைகள் ஏற்றுகொள்ள மனித சிந்தை புரிந்துகொள்ள தடுமாறுகிறது.

உண்மையான பக்தியுள்ள ஜெபசிந்தையால் மட்டுமே துணிகரமாய் தேவனுடைய ஆழமான காரியங்களை - பரலோக தரிசனங்களையும், பரலோக மகிமைகளையும் கண்ணாடியில் காண்பதுபோல் காணமுடியும். ஏனெனில் நம்முடைய சிருஷ்டிகரின் வழிகளிலும் சிந்தையிலுள்ள ஒவ்வொரு குணங்களிலும் அற்புதமான பரிபூரண இசைவைக் காணலாம். தேவனுடைய ஒவ்வொரு பிள்ளைகளிடத்திலும் காணப்படும் கேள்விக்கிடமின்றி காணப்படும் நம்பிக்கை இந்த நாளின் உச்சக்கட்ட சூரிய ஒளிக்குள் எல்லா இரகசியங்களும் வெளிப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில் உன்னதமானவரிடம் நாம் காட்டும் பரிபூரணமான நம்பிக்கைக்கு நம்முடைய பிதாவின் இருதயத்திலுள்ள விலையுயர்ந்த அன்பு நமக்குப் பரிசாகக் கொடுக்கப்படுகிறது.

**சித்தத்தில் ஒருங்கிணைப்பு**

வசனங்களின் கட்டமைப்பானது இந்த பாடத்தைச் சுற்றி ஒரு நேர்த்தியான முன்மாதிரியினால் பின்னப்பட்டுள்ளது. பொற்சரிகையோடு மற்ற எல்லாவிதமான வண்ணங்களிலுள்ள நூல்கள் முடிவில்லா தரங்களை தரக்கூடிய அளவுக்கு நேர்த்தியாகப் பின்னப்பட்டு இருக்கிறது. இதன் பலனாக கொழுந்துவிட்டு பிரகாசிக்கும் தெய்வீக ஞானமும் திறமையும் வெளிப்படுகிறது. இதில் காணப்படும் பல வண்ணத்தில் உள்ள வித்தியாசமான நூல்கள் ஒவ்வொரு தனிப்பட்ட பில்லியன் கணக்கான சுதந்தரம் பெற்றுள்ள மனித சிந்தைகளை அடையாளப்படுத்துகிறது. இதில் காணப்படும் பொற்சரிகை தேவனுடைய சித்தத்தின் தனித்துவத்தையும், அதைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆற்றலையும் அடையாளப்படுத்துகிறது. அவருடைய அற்புதமான வடிவமைப்பு மற்ற நூல்களின் இழைகளோடு பரிபூரணமாகக் காணப்படுகிறது.

மேலும் தெய்வீக நோக்கம் நிறைவேறும்படியாக நாம் கவனிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். ஒன்று, எல்லா சிந்தையையும் கிறிஸ்துவுக்குள்ளான கீழ்ப்படிதலுக்கு அர்ப்பணிக்க வேண்டும். இரண்டு, பொற்சரிகை பின்னப்பட்டதற்கு இசைவாக நாம் பின்னப்பட வேண்டும். மூன்று, ஒவ்வொரு நாளும் தேவனுடைய பரிபூரணமான சித்தத்தில் நித்தியநித்தியமாக ஐக்கியப்பட வேண்டும்.

தெய்வீக திட்டத்தில் ஒவ்வொரு மனுஷ சித்தத்தையும், சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகர் பின்னுவதே மிக அற்புதமானக் காரியமாகும். உண்மையில் இப்படிப்பட்ட அற்புதமான காரியத்தை சொப்பனத்தில் காண்பது கூட அரிது. ஆயினும் இக்காரியங்கள் தேவனுடைய வார்த்தையில் மிக அழகாக விவரிக்கப்பட்டுள்ளது. எபேசியர் 1:10 - "தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்." தெய்வீக ஞானம், பொறுமை மற்றும் திறமைக்கு எப்படிப்பட்ட ஒரு சவால்!

**ஐந்து பகுதிகள்**

சங்கீதங்களை ஐந்து ஆகமங்களின் அடிப்படையில் ஐந்து பிரிவுகளாகப் பிரிப்பதற்கு யூதர்களின் சிந்தை முற்பட்டது. சங்கீதம் 1, முதலில் வரும் ஆதியாகமத்தின் தொகுப்பு தேவனோடு இருந்த ஆசீர்வதிக்கப்பட்ட இனிமையான உறவை இசைவாகக்

காட்டுகிறது. இதை ஏதேனில் பரிபூரணமான நிலைக்கு ஒப்பிடப்படுகிறது. மனிதனுடைய அறியாமையானது இந்நிலையை வெகு சீக்கிரத்தில் கடக்கச் செய்யும் என்று தேவன் அறிந்திருந்தார். ஆகவே இரண்டாம் சங்கீதத்தில், பெற்றோரின் கட்டுகளிலிருந்து விடுவிக்கப் படுவதற்கு சிருஷ்டியானது புரட்சிகரமான நிலையில் எதிர்ப்பதைக் காணலாம். (சங்கீதம் 2:3) இந்த கூக்குரல், இந்நாள் வரைக்கும் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. டார்வின் கொள்கையை மிக உறுதியாக எதிர்க்கக்கூடிய தாமஸ் என்பவர், மிக உணர்ச்சிவசப்பட்டு ----- தெய்வீக சிங்காசனத்தை எட்டிப்பிடிக்க வேண்டும் என்று எண்ணி, பரலோகத்தை வந்து சேரும் அளவுக்கு உயரமான கட்டிடத்தைக் கட்டிய மனிதர்களின் இறுமாப்பை எண்ணி தேவன் நகைப்பார். நீண்ட காலங்களாக மனிதன் எதிர்நோக்கும் சோகமான பின் விளைவுகளை எண்ணாமல், அவனுடைய போராட்டங்களை தேவனுடைய திட்டம் அனுமதிக்கிறது.

மனித அனுபவத்தைப் பயன்படுத்தி தெய்வீக சிந்தையை வெளிப்படுத்துவதைக் குறித்து வசனங்கள் ஊக்குவிக்கிறது. ஒரு குழந்தை வளர்ந்து தன்னுடைய சுயாதீனத்தை உணரும்போது, ஏதோ சில காரியங்களில் பிரச்சனைகள் எழும்பும் என்று பெற்றோர் அனைவரும் அறிந்திருக்கிறார்கள். இது மிகத் திறமையாகக் கையாண்டு, நன்மையான பலன்களைப் பெறுவதற்கு அதிகமான ஞானம் தேவைப்படுகிறது. நம்முடைய சிருஷ்டிகர் மிகுதியான ஞானத்தையும், மிக உயர்ந்த நிலையிலுள்ள அன்பையும் கொண்டிருக்கிறார். ஏனெனில், அவர் ஞானத்தின் ஊற்றாய் இருக்கிறார். நன்கு அறியப்பட்ட குழந்தை நிபுணரின் ஒரு ஆலோசனை என் சிந்தைக்கு வருகிறது. எப்போதும் குழந்தைகளுக்கு இரண்டு தேர்வுகளை முன் வைக்கப்படும்படி ஆலோசனைக் கூறுகிறார். இந்த இரண்டு காரியங்களும் அவர்களுக்கு நன்மையான நோக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதில் பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டும். இப்படிப்பட்ட ஒரு காரியம் மனுக்குலத்திற்கு முன் வைக்கப்பட்டது. தவிர்க்க இயலாத காரணத்தினால் இரண்டாவது காரியம் தேர்வு செய்யப்பட்டு மிகவும் விபரீதமான பலன்களை அடைய வேண்டியதாயிற்று. ஆனால் தேவன் இதை அவருடைய ஞானத்தை உணர்ந்தவராக அந்த கெட்டுப்போன குமாரனை வீட்டைவிட்டு செல்வதற்கு அனுமதித்தார். தன்னுடைய சொத்தில் ஒரு பகுதியையும் சுய இலாபத்திற்காக செலவு செய்ய அனுமதித்தார். ஆயினும் அந்த உவமையின் முடிவில் ஒரு நித்தியமான சந்தோஷம் ஏற்பட்டதுபோல, முடிவில் மனுக்குலத்திற்கும் சம்பவிக்கும். இது நிர்பந்தத்தி னிமித்தம் அல்ல, மாறாக சரியான ஒழுங்குக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக எதிர் நோக்கும் கடுமையான அனுபவங்கள் இதற்குள்ளாக தெய்வீகமான உன்னதத்தின் காரியம் மனுஷனுடைய பெலவீனமான சுயாதீனத்தை எல்லாவற்றையும் மேற்கொள்ளும்படியாக தேவனுடைய உண்மையான ஊக்கமும், அன்பும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

### உம்முடைய புத்தகத்தில் சகல அங்கத்தினர் களும் எழுதப்பட்டிருக்கிறார்கள்

இந்த புத்தகத்திற்கு DNA என்ற தலைப்பைக் கொடுக்கலாம். விஞ்ஞானிகள் இதை Deoxyribose Nucleic Acid என்று அழைக்கிறார்கள். ஒரு அணுவில் காணப்படும் மூலக்கூறுகளில் இதுவே பெரிதானது. அதற்குள் (DNA) இருக்கும் மடிப்புகள் கிட்டத்தட்ட ஆறு அடி நீளத்திற்கு இழுத்து வைக்கலாம். சரீரத்தின் பெரும்பான்மையான அணுக்கள் இதன் கட்டமைப்பை தக்க வைத்துக் கொள்கிறது. DNA -வில் காணப்படும் மடிப்புகள் பிரிக்கப்பட்டு ஒன்றொடொன்று ஒன்றாக இணைக்கப்பட்டு நீட்டி வைக்கப்பட்டால், பூமியிலிருந்து சூரியன் வரைக்கும் உள்ள நீளத்தில் நானூறு மடங்குகளுக்கு மேலாகக் கொண்டிருக்கும்! (95 மில்லியன் மைல்கள்) சரீரத்திலுள்ள ஒவ்வொரு அணுக்களுக்குள்ளும் இப்படிப்பட்ட ஒரு புஸ்தகத்தைக் காணலாம். ஒவ்வொரு தனிப்பட்ட அணுவும் அதேபோல மற்றொரு அணுவாக உருவாக்கப்படும் வாய்ப்பு உண்டு. அதாவது, நம்முடைய அணுப்போலவே மற்றொரு அணுவை உருவாக்க முடியும். அப்போஸ்தலர் 26:8 - "தேவன் மரித்தோரை எழுப்புகிறது நம்பப்படாத காரியமென்று நீங்கள் எண்ணுகிறதென்ன?"

விஞ்ஞான வர்ணனையில் இந்த அமைப்பை ஒவ்வொரு மொழியிலும் உள்ள புத்தகங்களின் வார்த்தைகளுக்கும், வாக்கியங்களுக்கும், பத்திகளுக்கும், அதிகாரங்களுக்கும் பயன் படுத்தலாம்.

இப்படிப்பட்ட ஆச்சரியமான முறையில் கண்ணுக்குத் தெரியாத அணுக்கள் ஒருவகை திசுக்களாக வளர்ச்சியடைந்தது - எலும்பு, சதை, நரம்பு/- யோபு 10:13 - "இவைகள் உம்முடைய உள்ளத்தில் மறைந்திருந்தாலும், இது உமக்குள் இருக்கிறது என்று அறிவேன்."இக்காரியங்கள் மிக அருமையாக விவரிக்கப்பட்டுள்ளது. (யோபு 10:11-13)

உண்மையில் நாம் மிகவும் அறிபுதமாகவும், ஆச்சரியமான விதத்திலும்

உருவாக்கப்பட்டிருக்கிறோம். "என் கருவை உம்முடைய கண்கள் கண்டது, என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லததபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது. " என்று சங்கீதக்காரரர் இதை சுருக்கமாகக் கூறியிருக்கிறார்.

இப்படிப்பட்ட அற்புதமான சிருஷ்டிகரையும், அவருடைய திறமையான வேலைகளையும் நியாயமான கட்டமைப்புகளையும் யோபுவினால் நம்பமுடியவில்லை. (யோபு 10:8) நாம் கூட!

**மேலோங்கி வா**

மனுஷனுடைய அமைப்பைப் பொறுத்த வரையில் நம்முடைய தேவனுடைய ஆச்சரியமான ஞானத்தை மட்டுமல்ல, தேவ ஜனங்கள் ஒவ்வொருவர் வழியாக நடைமுறைப்படுத்தப்படும் ஆழமானக் காரியங்களைக் குறித்து வியப்பாக உள்ளது. இப்படிப்பட்ட ஆச்சரியமும் அற்தமுமான முறையில் அமைக்கப்பட்ட மனுஷ சரீரம் இதை காட்டிலும் அதிகமான மேன்மையுள்ள மற்றொரு தேவனுடைய சிருஷ்டிப்பாக மாற்றப்படும் - தலை மற்றும் சரீரமாகிய கிறிஸ்து.

இவ்வளவு அதிகமான திறமையும் ஞானத்தின் ஐசுவரியமும் மனித சரீரத்தின் சிருஷ்டிப்பில் வெளிப்படுத்தப்பட்டிருக்க புதிய சிருஷ்டிகளைக் குறித்து என்ன சொல்லுவோம்!

தேவன் ஆவிக்குரிய என்ஸைம்களின் அளவை அதிகரிப்பதற்கு தொடர்ச்சியான விவரங்களை மற்றொரு புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார். முழுமையாக அனைவரும் கிறிஸ்துவுக்குள் ஆசீர்வதிக்கப்படுவதற்கு அவர் கவனமாக ஆயத்தம் செய்திருக்கிறார். இந்த ஒரு மாபெரும் உண்மை ரோமர் 8:28-ல் காண்கிறோம் அல்லவா? "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்."

தேவனுடைய சித்தத்தினால் அவர்கள் ஜெநிப்பிக்கப்படுகிறார்கள். (யாக்கோபு 1:18) தேவனுடைய சித்தத்தினால் அவர்கள் ஜீவனுள்ள ஒரு சிருஷ்டியாக சிருஷ்டிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு பகுதியிலும் நடக்கக்கூடிய வளர்ச்சியில் தேவனுடைய சித்தம் வெளிப்படுகிறது. ஒவ்வொருவரும் இயேசுவை தங்களுடைய தலையாகக் கொண்டு ஜீவனைப் பெற்று ஞானமும் அன்பும் நிறைந்த தேவனுடைய விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு இணைந்து செயல்படுகிறார்கள். சங்கீதம் 40:7 - "அப்பொழுது நான். இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது;" ஒவ்வொரு வாக்குத்தத்தமும் நிழலும் முன்மாதிரிகளும் சகல காரியங்களின் தோற்ற முதல் தேவனுடைய சிந்தையில் நிலைக் கொண்டிருந்தது. அவருடைய சர்வ வல்லமையினாலும், ஞானத்தினாலும், திறமையினாலும் மிக நேர்த்தியாக வடிவமைக்கிறார்.

லூக்கா1:35 - "தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்தஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்." இதுவும் தூதர்களினால் அறிவிக்கப்பட்ட அற்புதமான ஒரு செய்தியாகும். எபேசியர் 2:10 - "ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்."

வளர்ச்சியின் முழு செயல்பாட்டில் வயிற்றுக்குள் வளரும் குழந்தை சரீரத்தில் உள்ள என்ஸைம்ஸ் எவ்வளவு பூரணமாக ஒவ்வொரு உயிருள்ள அணுக்களுக்கும் கொண்டு செல்லப்பட்டு வளர்ச்சியடையச் செய்கிறது என்பதை அறியாதிருக்கிறது. ஆனால் புது சிருஷ்டியின் வளர்ச்சியில் ஒவ்வொரு நிலைகளிலும், தாங்கள் பெறக்கூடிய அனுபவங்களினால் அவர்கள் சுயாதீனத்தோடு தேர்வு செய்யும் நன்மைகளின் அடிப்படையில் வளர்ச்சிக் காணப்படுகிறது. ஆயினும், தேவனுடைய ஆவி நமக்குள் கிரியை செய்வதில் ஒரு ஒற்றுமை காணப்படுகிறது. அவர் நமக்குள் விசுவாசத்தையும் வைராக்கியத்தையும் ஊக்குவித்து, சுத்திகரிக்கக்கூடிய சத்தியத்தின் வல்லமையைப் பயன்படுத்தி புதிய சிந்தையை உருவாக்குகிறார். வாக்குத்தத்தங்களில் உள்ள எண்ணிக்கையில் அடங்காத செய்திகள் ஜீவனுள்ள வார்த்தைகள் வழியாகக் கொடுக்கிறார். தேவனால் சுவாசிக்கப்பட்ட ஒவ்வொரு செய்தியும் தெய்வீக நோக்கத்திற்கு இசைவாக மனுஷனுடைய ஆவிக்குரிய வளர்ச்சியைத் தூண்டுகிறது.

எண்ணிக்கையில் அடங்காக் காரியங்கள் - எல்லா அனுபவங்களையும், சூழ்நிலைகளையும் மேற்கொள்ளும் காரியங்கள் - நம்முடைய சிந்தையை தேவனுடைய ஞானத்திற்கு இசைவாக வடிவமைக்கிறது. இந்த வடிவமைப்பைப் பெறுவதற்குத் தொடர்ச்சியான செயலாக்கம், குறிப்பிட்ட நேரத்திற்குள் நடப்பிக்க வேண்டியதாய் இருக்கிறது. இந்த தெய்வீகமான காரியத்தில் மனுஷனுடைய சித்தத்தோடு மிக அற்புதமான

பரலோகத்தின் தேவ செயல், பரிபூரணமான இசைவைக் காட்டுகிறது.

**பரிபூரணமான பகை**

இவ்வளவு விசேஷித்த தேவனை இழிவாக எண்ணக்கூடிய வர்கள், பரிபூரணமானப் பகையைப் பெறுவதாக சங்கீதக்காரர் 19-ம் வசனத்தில் பேசுகிறார். தனிப்பட்ட விரோதிகள் மேல் பழிவாங்குவதற்கு விண்ணப்பிக்கக்கூடிய மற்ற சங்கீதங்களையும் காணலாம். சில நேரங்களில் பிதாவாகிய தேவன் இஸ்ரயேலுக்கு எதிரான அவர்களுடைய விரோதிகளோடு யுத்தம் செய்ய வழிநடத்தினார். எடுத்துக்காட்டாக, இஸ்ரயேல் ஜனங்கள் வனாந்தரப் பிரயாணத்தின் முடிவில் கானானியர்களைக் கொன்று, அவர்களுடைய தேசத்தை சுதந்தரிக்கும்படி மோசேயின் வழியாக தேவனிடத்திலிருந்து கட்டளைப் பெற்றார்கள். பகைவரை நேசிக்க வேண்டும் என்ற இயேசுவின் பிரமாணத்தோடு இவைகளை இசைவாக எவ்வாறு கண்ணோக்க முடியும்? பரிசுத்தமான, பரிபூரண சிந்தனைகளுக்கு இடையில் எந்த முரண்பாடுகளும் இருக்க வாய்ப்பில்லையே. மேலும், யோவான் 14:10 - "நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை; என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார்" என்று இயேசு கூறியிருக்கிறார்.

தேவனுடைய பரிபூரணமான அன்பு அவர் கொடுத்த விலையுயர்ந்த பரிசின் மூலமாக வெளிப்பட்டது. ஆயினும் அவர் கோபாக்கினையின் பிள்ளைகளிடத்தில் நித்தமும் கோபப்பட்டார் என்று சொல்லப்படுகிறது. (சங்கீதம் 7:11) ஒவ்வொருவரும் தங்களுடைய அன்பான சிருஷ்டிகரை அறிந்து கொள்ளுவதற்கான வாய்ப்புகளைக் கொடுப்பார். ஆயினும் இன்று துன்மார்க்கன் செழிக்கிறான். இறுமாப்புள்ளவர்கள் இதற்கு தீர்வு காணும்படி கோபத்தினால் அலறுகிறார்கள். இதற்கு சங்கீதக்காரன் பதிலளிக்கிறார். இருபது சங்கீதங்களுக்கு மேல் ஆண்டவருடைய மகிமையான தீர்க்கதரிசனங்களுக்கு இசைவாக துன்மார்க்கர்களை ஜெயித்து அவர்களை வீழ்த்துவதைப் பற்றிக் குறிப்பிடுகிறது. மனுஷ சந்தோஷத்திற்கு எதிராளிகளின் வழியில் மிக உன்னதமான எதிர்நோக்கு நிறுத்தப்பட்டுள்ளது. மனுஷ இருதயங்களில் உள்ள ஒவ்வொரு பாவமான எண்ணங்களும் அழிக்கப்பட்டு மீதியான வல்லமை உட்பிரவேசிக்க வேண்டும். நம்முடைய எதிராளிகள் நமக்குள் இருப்பதினால் அவைகளைத் தேடி கண்டுபிடித்து அவைகளை வெளியேற்றி நம்மை நித்தியமான வழியில் நடப்பதற்கு, தேவனுடைய பரிசுத்தமான கண்கள் வேண்டும் என்று சங்கீதக்காரன் விண்ணப்பிக்கிறார், ஆமென்.

## விலையேறப்பெற்ற சீயோனின் புத்திரர்

விலையேற்றப்பெற்ற சீயோனின் புத்திரர்,
சுத்திகரிக்கப்பட்ட தூய்மையான பொன்னை போன்று,
நீடித்தகாலமாய் இருப்பதற்கு வணைக்கப்பட்ட,
மண்ணின் ஜாடிகளை போன்றவர்கள்.

விலையேறப்பெற்ற சீயோனின் புத்திரர்,
திராட்சைக் செடியின் உண்மையான கொடிகள்,
ஆவியிலும் சிந்தையிலும் நம் போதகராகிய,
கிறிஸ்துவுடன் கூட ஒருமனப்பட்டவர்கள்.

விலையேறப்பெற்ற சீயோனின் புத்திரர்,
அவர் மணவாட்டியாவதற்கு வரவழைக்கப்பட்டு,
அவருடைய மகிமையின் சிங்காசனத்துக்கு பங்காளிகளாக,
அவருடன் நித்தியமாய் ஆட்சிபுரிய அழைக்கப்பட்டவர்கள்.

ஒரு வித்தியாசமான தொனி

# சங்கீதங்களில் காணப்படும் சாபங்கள் : அன்பான தேவனோடு இவர்களை மீண்டும் ஒப்புரவாக்குதல்



"துன்மார்க்கனுடைய வீட்டில் கர்த்தரின் சாபம் இருக்கிறது, நீதிமான்களுடைய வாசஸ்தலத்தையோ அவர் ஆசீர்வதிக்கிறார்." (நீதிமொழிகள் 3:33)

**O. B. Elbert**

ஒரு நாளின் உபத்திரவத்தின் போதும், வேதனைகளின் போதும் இருதயத்திற்கு ஏற்ற ஆறுதல் அளிக்கும் மருந்தாக தேவனுடைய ஜனங்கள், தேவனுடைய வார்த்தைகளை முதலில் சங்கீதங்களில் தேடுவார்கள். இது நன்மையானதும்கூட. அதில் நம்முடைய கிறிஸ்தவ இருதயங்களின் உணர்வுகளை பல கோணங்களில் காணலாம். சங்கீதம் 119:50, 54, 55 - "அதுவே என் சிறுமையில் எனக்கு ஆறுதல், உம்முடைய வாக்கு என்னை உயிர்ப்பித்தது. நான் பரதேசியாய்த் தங்கும் வீட்டிலே உமது பிரமாணங்கள் எனக்குக் கீதங்களாயின. கர்த்தாவே, இராக்காலத்தில் உமது நாமத்தை நினைத்து, உமது வேதத்தைக் கைக்கொள்ளுகிறேன்" என்ற வசனங்கள் இப்படிப்பட்ட உணர்வுகளை அருமையாக வெளிப்படுத்துகிறது.

சங்கீதம் 23:1-6 - "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன். அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார். அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார். நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும். என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்" என்ற சங்கீதம் நம்மை எண்ணிக்கையில் அடங்கா முறைகள் நம்முடைய இருதயங்கள் ஆறுதல் அளித்திருக்கிறது. இதன் சிந்தனைகள் மதுரமாயும், திருப்தியாயும் இருக்கிறது. - ஆத்துமாவுக்கு உண்மையில் ஆறுதல் அளிக்கும் வசனங்கள்.

ஆயினும் சில நேரங்களில் சாலைகளில் செல்லும்போது சில தடுக்கல்களில் மோதுவதுப்போல சில நேரங்களில் சங்கீதப் புஸ்தகத்தில் ஏதோ சில வசனங்களை எடுத்து வாசிக்கும்போது, சங்கீதம் 109:6-15 - "அவனுக்கு மேலாகத் துஷ்டனை ஏற்படுத்திவையும், சாத்தான் அவன் வலதுபக்கத்தில் நிற்பானாக. அவன் நியாயம் விசாரிக்கப்படும் போது குற்றவாளியாகக்கடவன்; அவன் ஜெபம் பாவமாகக்கடவது. அவன் நாட்கள் கொஞ்சமாகக்கடவது; அவன் உத்தியோகத்தை வேறொருவன் பெறக்கடவன். அவன் பிள்ளைகள் திக்கற்றவர்களும், அவன் மனைவி விதவையுமாகக்கடவர்கள். அவன் பிள்ளைகள் அலைந்து திரிந்து பிச்சையெடுத்து, தங்கள் பாழான வீடுகளிலிருந்து இரந்துண்ணக்கடவர்கள். கடன் கொடுத்தவன் அவனுக்கு உள்ளதெல்லாவற்றையும் அபகரித்துக்கொள்வானாக; அவன் பிரயாசத்தின் பலனை அந்நியர் பறித்துக்கொள்ளக்கடவர்கள். அவனுக்கு ஒருவரும் இரக்கங்காண்பியாமலும், அவனுடைய திக்கற்ற பிள்ளைகளுக்குத் தயவுசெய்யாமலும் போவார்களாக. அவன் சந்ததியார் நிர்மூலமாகக்கடவர்கள்; இரண்டாந்தலைமுறையில் அவர்கள் பேர் அற்றுப்போவதாக. அவன் பிதாக்களின் அக்கிரமம் கர்த்தருக்கு முன்பாக நினைக்கப்படக்கடவது, அவன் தாயின் பாவம் நீங்காமலிருப்பதாக. அவைகள் நித்தமும் கர்த்தருக்கு முன்பாக இருக்கக்கடவது; அவர்கள் பேர் பூமியிலிராமல் நிர்மூலமாவதாக" என நாம் உணர்ச்சி வசப்படுகிறோம். ஏதோ அதில் இருப்பதாக நினைக்கிறோம். இவைகள் நமக்கு மிகவும் அதிருப்தியாய் தோன்றுகிறது.

மேற்கூறப்பட்ட வசனங்கள் நம்முடைய பாடத்திற்கு சரியான மாதிரியாக முன் வைக்கப்படலாம். ஏனெனில், இந்த சங்கீதங்கள் முழுமையான சாபங்களைக் கொண்டிருக்கிறது. இந்த சங்கீதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாபங்களை நாம் எவ்வாறு சமரசப்படுத்துவது? மேலும் தேவன் அன்பாகவே இருக்கிறார் என்ற நம்முடைய கிறிஸ்தவ புரிந்து கொள்வதோடு நாம் எவ்வாறு இதை ஒப்பிடுவது? இந்த சாபங்களை தேவனுடைய அன்பினால் எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது? முக்கியமாக நம்முடைய விசுவாசத்தை நாம் எவ்வாறு காத்துக் கொள்வது?

## தாவீது ஒரு நிழல்

தாவீது, 109-ம் சங்கீதத்தின் ஆசிரியர். இயேசு கிறிஸ்துவுக்கும் தற்காலிகமாக இந்த பூமியின் மேல் மாம்சத்தில் வாழும் சபைக்கு நிழலாக சொல்லப்படுகிறது. பூமியில் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடக்கூடிய போர் சேவகனாகிய சபைக்கு ஒப்பாக தாவீது சித்தரிக்கப்படுகிறார் என்று நாம் சொல்வதுண்டு. சங்கீதம் 18:34 - "வெண்கல வில்லும் என் புயங்களால் வளையும்படி, என் கைகளை யுத்தத்திற்குப் பழக்குவிக்கிறார்" என்று கூறி தாவீது யேகோவா தேவனுக்குள் களிக்கூர்ந்தார்.

அவர் ஒரு மிகச் சிறந்த போர் வீரனாக இருந்ததினால், அவர் தேவனுடைய மகிமையான வீட்டைக்கட்ட அனுமதிக்கப்படவில்லை. 1 நாளா 28:2, 3 - "அப்பொழுது ராஜாவாகிய தாவீது எழுந்திருந்து காலூன்றி நின்று: என் சகோதரரே, என் ஜனமே, நான் சொல்வதைக் கேளுங்கள்; கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியும் நமது தேவனுடைய பாதபடியும் தங்குவதற்கு ஒரு ஆலயத்தைக் கட்ட நான் என் மனதிலே நினைத்து, கட்டுகிறதற்கு ஆயத்தமும் பண்ணினேன். ஆனாலும் தேவன்: நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டாம்; நீ யுத்த மனுஷனாயிருந்து, ரத்தத்தைச் சிந்தினாய் என்றார்" என்று தாவீது கூறுகிறார். மகிமையான கிறிஸ்துவின் அரசாட்சி சாலொமோனுக்குள் சித்தரிக்கப்பட்டது. அவர் தேவனுடைய வீட்டைக்கட்ட சிறப்புரிமைப் பெற்றார்.

தாவீது அநேக யுத்தங்களில் அநேக எதிரிகளோடு போரிட்டதற்கு ஒப்பாக கிறிஸ்துவும் அவருடைய சபையும் இந்த பூமிக்குரிய வாழ்க்கையில் அநேக போர்களை போராட வேண்டியதாய் இருக்கிறது. 2 தீமோத்தேயு 2:3 - "நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி" என்று பவுல் நம்மை ஊக்குவிக்கிறார். இந்த உலகம், மாம்சம் மற்றும் சாத்தான் நம்முடைய எதிராளிகளாக அடையாளம் காணப்படுகிறார்கள். தேவனுடைய அதிகாரத்தை சட்ட விரோதமாய் வன்முறையில் பறித்துக் கொண்ட சாத்தான் மற்றும் பாவத்தின் விளைவுகளே இந்த எதிரிகள். கிறிஸ்து மற்றும் அவருடைய சீஷர்கள் முழுமையாக பாவத்தை ஜெயம் கொண்டு அவைகளை நித்தியமாக அழிப்பதைக் குறித்து இந்த சங்கீதத்தில் தாவீது பேசுகிறார்.

இந்த மாபெரும் வெற்றியானது இந்த பூமியின் மேல் தேவனுடைய இராஜ்யத்தில் ஒரு பரிபூரணமான பாவமற்ற மனுக்குலம் மீண்டும் சீர் பொருந்தப்படும். நாம் தாவீதின் சாபங்களை சுய விருப்பங்கள் அல்லது ஒரு மனுஷர் மேல் கொண்டுள்ள பகை... போன்ற காரியங்களுக்காக நோக்கினால், இது ஒரு முக்கியமில்லாத அற்பமான காரியமாகத் தோன்றும். சில நேரங்களில் கடும் துயரத்தையும் வருவிக்கும்.

ஆனால் இவைகளை நாம் ஒரு சிறந்த முறையில் பாவம் மற்றும் மரணத்தை ஜெயிப்பதற்கான தேவனுடைய சித்தத்திற்குப் பொருத்திப் பார்க்கையில் மிக அழகாகத் தோன்றும். சாபங்கள் அனைத்துமே தெய்வீக நீதிக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பாகும். "என் சுவிசேஷத்தின் படியே, தேவன் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் நாளிலே இது விளங்கும்."(ரோமர் 2:16)

## நீதியை நேசிப்பது மட்டுமே போதாது

நம்மில் அநேகருக்கு நீதியை நேசிப்பது கடினமான காரியம் அல்ல. ஏனெனில், நாம் அவைகளின் நன்மைகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். நமக்கு நீதியையும், சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் உறுதியாகப் பெறுவதினால் நாம் நீதியை அதிகமாக நேசிக்கிறோம். ஆயினும் நீதியை விரும்பினால் மட்டும் போதாது. நாம் அக்கிரமத்தை வெறுக்கக்கூடியவர்களாய் இருக்க வேண்டும். இது மிக முக்கியமானது. சங்கீதம் 45:7 - "நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுக்கிறீர்; ஆதலால் தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப்பார்க்கிலும் உம்மை ஆனந்ததைலத்தினால் அபிஷேகம்பண்ணினார்."

சங்கீதங்களில் காணப்படும் ஆசீர்வாதங்களை அநேகர் நேசிக்கிறார்கள். ஆயினும், சாபங்களை நேசிப்பது மிக இயல்பற்ற காரியமாய் இருக்கிறது. - அநீதியுள்ளவர் அனைவரும் அழிவுக்கு அழைக்கப்படுகிறார்கள். அக்கிரமத்தை பரிபூரணமாக வெறுப்பதைக் குறித்து சங்கீதங்களில் காணப்படும் சாபங்கள், தேவன் மேல் அவர்கள் வைத்திருக்கும் அன்பைக் காண உதவி செய்கிறது. (சங்கீதம் 139:21-24) இவர்கள் தேவனுடைய நித்திய இராஜ்யத்தில் ஜெயம் பெறுகிறவர்களாக அழைக்கப்பட்டவர்கள். இவர்கள் தேவனுடைய ஒவ்வொரு எதிராளிகளையும் அழிப்பதற்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த எதிராளிகள் மாம்சத்தில் குடியிருக்கும் நம்முடைய பாவங்களாகவோ அல்லது இந்த உலகத்தின் அக்கிரமமாகவோ அல்லது சாத்தானாகவோ இருக்கலாம். நீதி, அன்பு, நேர்மை போன்ற

காரியங்களை ஸ்தாபிப்பதற்காக அழைக்கப் படுகிறார்கள்

**ஒரு தீர்க்கதரிசனம்**

பாவம் முற்றிலுமாக ஜெயிக்கப்படுவதற்கு எரேமியா தீர்க்கதரிசி ஒரு ஆழமான கண்ணோக்கத்தைக் கொடுத்திருக்கிறார். அவர் பாபிலோனின் அழிவைக் குறித்தும், அதை காட்டிலும் பெரிய அளவிலான பாபிலோனின் அழிவைக் குறித்தும் பேசியிருக்கிறார். (வெளிப்படுத்தல் 16:19) பாபிலோன் மட்டுமே முழுமையாக அழிக்கப்படாமல், அவளுடைய பாரம்பரியக் கொள்கைகள், சமுதாய கட்டமைப்பு, அரசியல் ஆட்சி, வர்த்தகங்கள் அனைத்தும் முழுமையாக அழிக்கப்படும் என்று முழுமையாகக் காட்டுகிறார். இவைகள் எந்தவிதத்திலும் பூமியிலுள்ள தேவனுடைய இராஜ்யத்திற்குப் பயன்படாது. பாவம் மொத்தமாகப் பிடுங்கப்படும்.

எரேமியா 51:24-26 - "பாபிலோனுக்கும் கல்தேயர் தேசத்தின் சகல குடிகளுக்கும், அவர்கள் உங்கள் கண்களுக்கு முன்பாகச் சீயோனில் செய்த அவர்களுடைய எல்லாப் பொல்லாப்புக்காகவும் பழிவாங்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். இதோ, பூமியை எல்லாம் கெடுக்கிற கேடான பர்வதமே, நான் உனக்கு விரோதமாக வந்து, என் கையை உனக்கு விரோதமாக நீட்டி, உன்னைக் கன்மலைகளிலிருந்து உருட்டி, உன்னை எரிந்துபோன பர்வதமாக்கிப்போடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். மூலைக்கல்லுக்காகிலும் அஸ்திபாரக்கல்லுக்காகிலும் ஒரு கல்லையும் உன்னிலிருந்து எடுக்கமாட்டார்கள்; நீ என்றென்றைக்கும் பாழாய்க்கிடக்கிற ஸ்தலமாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார்." தேவனுக்கு நன்றி!

பாவத்தின் முழுமையான அழிவைக் குறித்து எரேமியா கண்ட தரிசனத்தை மல்கியா எதிரொலிக்கிறார்.

மல்கியா 4:1-4 - "இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள். துன்மார்க்கரை மிதிப்பீர்கள்; நான் இதைச் செய்யும்நாளிலே அவர்கள் உங்கள் உள்ளங்கால்களின்கீழ் சாம்பலாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஓரேபிலே இஸ்ரவேலரெல்லாருக்காகவும் என் தாசனாகிய மோசேக்கு நான் கற்பித்த நியாயப்பிரமாணமாகிய கட்டளைகளையும் நியாயங்களையும் நினையுங்கள்."

**பாவங்களை அழிப்பதற்கு சாபங்கள் கொடுக்கப் படுகிறது**

ஒவ்வொரு துளி பாவமும் முற்றிலுமாய் அழிக்கப்படும். ஆனாலும், ஒவ்வொரு பாவிகளும் அழிக்கப்படுவார்கள் என்று பொருள் அல்ல. தேவனுடைய இராஜ்யத்தில் சீர் பொருந்தும் செயல் முறையில், ஒரு பாவி சீர் பொருந்தப்படும் போது, அவர் அழிக்கப்படுகிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதுவே நம்முடைய நம்பிக்கை. இது தாவீதினுடைய சாபம் மட்டுமல்ல, முழு மனுக்குலத்தின் சாபம் கூட. ஏனெனில், நீதிமான் ஒருவனும் இல்லை. ஒருவராகிலும் இல்லை (ரோமர் 3:10) என்று வசனங்கள் குறிப்பிடுகிறது. நாம் அனைவரும் பாவத்தின் கறைகளைப் பெற்றிருக்கிறோம். அதில் சிலராகிய நாம் கிறிஸ்து இயேசுவின் மூலம் இக்காலத்தில் கிருபை பெற்றிருக்கிறோம். மீதமுள்ள பெரும்பான்மையானோர் இந்த பூமியில் நடைபெற இருக்கும் தேவனுடைய இராஜ்யத்தில் கிருபைகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்தவர்களாக இருப்பதினால் நமக்குள் இருக்கும் பாவத்தையும் வெறுக்கிறோம். மேலும் நாம் கிறிஸ்துவுக்குள் பெற்ற நீதிமானாக்கப்பட்ட நிலைக்காக தேவனை ஸ்தோத்திரிக்கிறோம். ஆயினும் பவுல் கூறியிருக்கிறதுபோல, மாம்சத்தின் சில பாவங்களை வெளியேற்றுவதற்கு சில நேரங்களில் இயலாதவர்களாயும் இருக்கிறோம். ஆயினும் அவர் தன்னுடைய முழு சிந்தையோடு தேவனுக்குப் பணி செய்ததுபோல, நாமும் பணி செய்வதற்காக கர்த்தரை ஸ்தோத்திரிப்போம்.

ரோமர் 1:18 - "சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது" என்ற வசனத்தில் பயன்படுத்தப்பட்ட மொழியை கூர்ந்து கவனிக்கவும். தேவபக்தியற்ற மற்றும் அக்கிரமத்துக்கு விரோதமாக தேவனுடைய கோபாக்கினை எழும்புவதாக பவுலின் வார்த்தைகள் குறிப்பிடுகிறது. அவர் பாவிகளை அல்ல, பாவத்தை வெறுக்கிறார். அவர் பாவிகளை அல்ல, பாவத்தை அழிக்க விரும்புகிறார். எசேக்கியேல் 18:23 - "துன்மார்க்கன் சாகிறது எனக்கு

எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்." ஆயினும் சில பாவிகள் பாவத்தை இறுக பிடித்துக் கொண்டு அவைகளை விட்டுப் பிரியாமல் இருப்பார்கள் என்று வசனங்கள் கற்பிக்கிறது. இவர்கள் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். (வெளிப்படுத்தல் 21:8)

109-ம் சங்கீதத்தில் துவங்கின நாம் மீண்டும் அதற்கு திரும்புவோம். இப்படிப்பட்ட கடுமையான மொழிகள் பயன்படுத்தப்பட்ட காரணத்தை அதில் காணலாம். தாவீது எதை வெறுத்தார் என்பதிலும், எதற்காக இவ்வளவு கோபமாக எழுந்தார் என்பதையும் கண்டுபிடிக்கலாம். சாபங்கள் கொடுக்கப்படும் சங்கீதங்களின் பின்னணியில் மறைந்திருக்கும் கோட்பாடுகளையும் காணலாம்.

பாவத்தின் ஒவ்வொரு தடத்தையும் காலப்போக்கில் முற்றிலுமாக அழிப்பதற்கு கடுமையாக தண்டனைகள் கொடுக்கப்படுகிறது. சங்கீதம் 109:16, 17 - "அவன் தயைசெய்ய நினையாமல், சிறுமையும் எளிமையுமானவனைத் துன்பப்படுத்தி, மனமுறிவுள்ளவனைக் கொலைசெய்யும்படி தேடினானே. சாபத்தை விரும்பினான், அது அவனுக்கு வரும்; அவன் ஆசீர்வாதத்தை விரும்பாமற்போனான், அது அவனுக்குத் தூரமாய் விலகிப்போம்."

இப்படிப்பட்ட அமைதியைக் குலைக்கக்கூடிய சங்கீதங்கள், வரக்கூடிய தெய்வீக நியாயத்தீர்ப்பில் ஆறுதல் அளிப்பதற்கு உறுதி கொடுக்கிறது. மேலும் தேவனும் அக்கிரமத்தை வெறுக்கக்கூடியவராய் இருக்கிறார் என்பதை உறுதிபடுத்துகிறது. ஆகவே வரக்கூடிய நாளில் சகல அக்கிரமங்களும் நீக்கப்பட்டு முழு மனுக்குலமும் தேவனுடைய பார்வையில் நீதியுள்ளவர்களாய் இருப்பார்கள் என்றும் உறுதியளிக்கிறது

## சுயத்தை ஜெயித்தல்

உரையாடலில் நம்மை மதிக்காது பேசுகையிலும்,
நற்கிரியை கவனிக்காமல் புறக்கணிக்கபடையிலும்,
எவராலும் அறியபடாமல் புகழ்மீது ஆர்வம் கொள்ளாமல்,
இருப்பதே சுயத்தை ஜெயம்கொள்ளுதல் ஆகும்.

நற்கிரியை தீமையாகவும், விருப்பங்கள் குறுக்கிடபடுகையிலும்,
ஆலோசனைகள் அவமதிக்கப்பட்டு, கருத்துக்கள் கேலிக்குள்ளாகையில்,
கோபத்தை தகர்த்து நாமே நம்மை ஆதரிக்கையில்,
அதுவே சுயத்தை ஜெபித்தல் ஆகும்.

நம்மைவிட தாழ்ந்த நிலைமையில் உள்ளவர்,
நம்மீது பழிசுமத்தும் சூழ்நிலைக்கு உட்படுத்தபடுகையில்,
ஆத்திரம் அடையாமல் மனத்தாழ்மையாய் ஏற்றுகொள்கையில்,
அதுவே சயத்தை ஜெயித்தல் ஆகும்.

நாம் மற்ற ஒதுக்கப்பட்டு, பூஜ்யமாக எண்ணப்படுகையில்,
நிந்தையினால் மேற்பார்வையிடபட்டு குட்டப்பட்டு,
கிறிஸ்துவோடு பாடுபட மேன்மையாக எண்ணுவதே,
சுயத்தை ஜெபித்தல் ஆகும்

# சங்கீதம் ௬௧, ஒரு விமர்சனம்

"தேவனே, என் கூப்பிடுதலைக் கேட்டு, என் விண்ணப்பத்தைக் கவனியும்." (சங்கீதம் 61:1)



**Wade Austin**

RINAH என்ற வார்த்தை, "பாடல்" என்று மொழி பெயர்க்கப்பட்டாலும், அதற்கு மகிழ்ச்சியான பாடல் என்று பொருள். ஆனால் நாம் பார்க்கக்கூடிய இந்த வேதப்பகுதி, எதிரிகளால் ஒடுக்கப்பட்டு தம்முடைய வாழ்க்கை அபாயம் நிறைந்து இருப்பதாக அந்த விண்ணப்பத்தில் அவர் கதறுவதைக் காணலாம். நாம் எத்தனை முறைகள் நடு இராத்திரியில் நம்முடைய கூக்குரலுக்கு தேவன் செவி கொடுக்க வேண்டும் என்று ஏங்கி இருந்தோம்?

நாம் தேவனிடத்தில் ஏறெடுக்கும் ஜெபங்களை தேவன் செவி கொடுக்காமல் பதிலளிப்பதில்லை என்ற பயம் நமக்குள் இராமல் நிச்சயமாக அவர் நம்முடைய ஜெபங்களைக் கேட்கிறார் என்ற உறுதியைப் பெற்றிருப்பதினால் நாம் பயப்பட வேண்டியவர்களாய் இருக்கின்றோம். தேவன் நம்முடைய உண்மையான நித்திய நண்பராய் நம்முடைய வேண்டுதல்களைக் கேட்கக்கூடியவராய் இருக்கிறார். ஏனெனில், அவர் மட்டுமே நமக்கு செவிக்கொடுத்து எனக்கு எட்டாத உயரமான கன்மலைக்கு வழி நடத்துபவர்.

**சங்கீதம்** 61:2 - "என் இருதயம் தொய்யும்போது பூமியின் கடையாந்தரத்திலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்; எனக்கு எட்டாத உயரமான கன்மலையில் என்னைக் கொண்டுபோய்விடும்."

நம்முடைய கன்மலை எவ்வளவு சிறிய கன்மலையாக உள்ளது. எந்த ஒரு வழி காட்டியும் இன்றி நாம் தனித்து நடப்பதுபோல் தோன்றுகிறது. நாம் எப்படிப்பட்ட உதவிகளைப் பெறுகிறோம்? நாம் நேசிக்கக்கூடிய தந்தையினிடத்தில் இருந்து உதவி பெறுகிறோம். அவர் நம்மைக் காட்டிலும் மேலும் உயரமான நிலைக்கு நம்மை அழைத்துச் சென்று, நம்முடைய தனிப்பட்ட எதிரிக்கு விரோதமாக நாம் அவரோடுகூட இணைந்து செயல்படும் வரை நம்மை நடத்துகின்றார். கன்மலை (tsur) என்ற வார்த்தை சங்கீதங்களில் தொடர்ச்சியாக அடிக்கடி காணப்படுகிறது. தாக்குதலுக்கு அசையாத கோட்டைக்கு இவ்வார்த்தை ஒப்பிடப்படுகிறது. இப்படியாக பிதாவாகிய தேவன் நம்முடைய ஒவ்வொரு உபத்திரவங்களிலும், நம்முடைய நித்திய கோட்டையான அவருடைய குமாரனாம் இயேசுவினிடத்திற்கு வழிநடத்திச் செல்கிறார்.

**சங்கீதம்** 61:3, 4 - "நீர் எனக்கு அடைக்கலமும்; சத்துருவுக்கு எதிரே பெலத்த துருகமுமாயிருந்தீர். நான் உம்முடைய கூடாரத்தில் சதாகாலமும் தங்குவேன்; உமது செட்டைகளின் மறைவிலே வந்து அடைவேன்."

பரலோகத்திலிருக்கிற நம்முடைய அன்பான தந்தையின் செட்டைகளின் கீழ் வாக்களிக்கப்பட்டுள்ள பாதுகாப்பை நாம் இதைக் காட்டிலும் எவ்வாறு கற்பனை செய்யக்கூடும்? நிச்சயமாக நம்முடைய தனிப்பட்ட எதிரிகளிடமிருந்து நாம் பாதுகாப்பாய் இருப்பதற்கு இவ்வார்த்தைகள் நமக்கு எவ்வளவு ஆறுதல் அளிக்கிறது. அவருடைய செட்டைகளின் மறைவில் இருப்பதற்கு மேலாக நாம் எந்த தனிப்பட்ட பாதுகாப்பையும் கற்பனையும்கூட செய்ய முடியாது.

**சங்கீதம்** 61:5 - "தேவனே, நீர் என் பொருத்தனை களைக் கேட்டீர்; உமது நாமத்திற்குப் பயப்படுகிறவர் களின் சுதந்தரத்தை எனக்குத் தந்தீர்."

உம்முடைய குடும்பத்தின் அங்கத்தினராக ஒரு ஐசுவரியமுள்ள சுதந்தரத்தைக் கொடுத்து, உம்முடைய குமாரராக என்னை தத்தெடுத்து, என்னைப் பெலப்படுத்துவதற்கு உம்முடைய பரிசுத்தாவியை எனக்கு தந்தீர். உம்முடைய நாமத்திற்கு பயந்த அனைவருக்கும் கொடுக்கப்படும் சுதந்தரத்தையும் -----

**சங்கீதம்** 61:6 - "ராஜாவின் நாட்களோடே நாட்களைக் கூட்டுவீர்; அவர் வருஷங்கள் தலைமுறை தலைமுறையாக இருக்கும்."

தேவபிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் எப்படிப்பட்ட ஆசீர்வதிக்கப்பட்ட வாக்குத்தத்தம்! நாம் அனைவரும் இதை மிக உறுதியோடு பற்றிக் கொள்வதற்கு அந்த வாழ்க்கை எவ்வளவு விலையுயர்ந்ததாய் இருக்கிறது! நம்முடைய வாழ்க்கையை தேவன் தீர்மானித்து விவேகத்தோடு அவர் நடத்தி வருகிறார் என்ற ஒரு அறிவிப்பைப் பெற்றிருக்கிறோம். ஆயினும் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய ஓட்டத்தை நிறைவு செய்யும் காலம் வரும்வரை தேவனுடைய நியாயத்தீர்ப்புக்காகக் காத்திருக்கிறோம்.

**சங்கீதம்** 61:7 - "அவர் தேவனுக்கு முன்பாக என்றென்றைக்கும் நிலைத்திருப்பார்; தயையும் உண்மையும் அவரைக் காக்கக் கட்டளையிடும்."

இந்த பூமியில் நம்முடைய ஊழியத்தின் நோக்கம் என்னவெனில், - நிச்சயமாக சத்தியத்தையும், அன்பையும் வெளிப்படுத்த வேண்டும். கேட்கக்கூடிய அனைவருக்கும் ஆறுதல் அளிக்கும் விதத்தில் தேவனுடைய அன்பையும், சத்தியத்தையும் கட்டாயமாக நாம் அறிவிக்க வேண்டும். இப்படி செய்வதினால் நாம் எப்பொழுதும் தேவனுக்குள் நிலைத்திருப்போம் என்ற உறுதியைப் பெறலாம்.

**சங்கீதம்** 61:8 - "இப்படியே தினமும் என் பொருத்தனைகளை நான் செலுத்தும்படியாக, உமது நாமத்தை என்றைக்கும் கீர்த்தனம் பண்ணுவேன்."

அவருடைய நாமத்தைத் துதிக்கவும், பாடவும் நமக்குள் இருக்கும் தேவனுடைய வார்த்தைகள் விரும்புகிறது. இப்படி செய்வதினால் நம்முடைய பொருத்தனைகளை நித்தம் செலுத்தக் கூடியவர்களாய் இருப்போம். அல்லேலூயா, நம்முடைய தேவன் எப்படிப்பட்டவர்!

# வரவிருக்கும் ஆசீர்வாதங்கள்



"உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக்கழிந்த நாள்போலவும் இராச்சாமம்போலவு இருக்கிறது." (சங்கீதம் 90:4)

**David Rice**

கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருடங்கள் என்ற வேதமாணவர்களுக்கு மத்தியில் காணப்படும் பிரபலமான கருத்தை சங்கீதம் 90:4 குறிப்பிடுகிறது. வெளிப்படுத்தல் 20:1-6 வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஆயிரம் வருடத்தை வரக்கூடிய ஒருநாளாக எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம். அதில் அடையாளமாக சாத்தான் கட்டப்பட்டு நம்முடைய ஆதி பெற்றோரின் கீழ்ப்படியாமையினால் அந்த பாவத்தின் விளைவுகள் கொஞ்சம் கொஞ்சமாக மனுக்குலத்தை விட்டு முழுமையாக நீக்கப்படும்.

"தேவனுடைய மனிதனாகிய மோசேயின் ஜெபம்" என்ற தலைப்பை இந்த சங்கீதத்திற்கு மேல் காணலாம். இது மிகவும் விசித்திரமாகத் தோன்றுகிறது. ஏனெனில் பொதுவாக மனுஷனுடைய ஆயுசு நாட்கள் 70 வருடங்கள் என்று 10-ம் வசனம் குறிப்பிடுகிறது. (இங்கு கொடுக்கப்பட்டுள்ள 70 வருடங்களின் காரணத்தை நாம் பார்க்கும்பொழுது, ஆதாம் வாழ்வதற்காக கொடுக்கப்பட்ட ஆயிரம் வருடத்தில் அவர் வாழ்ந்த 930 வருடங்களில் நீதியாக இருக்கக்கூடியது என்று கருதப்படுகிறது. இது தாவீதின் காலத்திற்கும் உண்மையில் பொருந்துகிறது. (தாவீதின் ஆயுசு நாட்கள் 70) ஆனால் மோசே 120 வருடங்களும், ஆரோன் 123 வருடங்களும், அவர்களின் மூத்த சகோதரியாகிய மிரியாம் அதைக்காட்டிலும் அதிகமான வருடங்கள் வாழ்ந்தாள் என்றும் காண்கிறோம். யோசுவாவின் ஆயுசு நாட்கள் 110. மேலும் எண்ணாகமம் 26:62-65 வரை வசனங்கள் கூறுகிறபடி, இருபது வயதிற்கு மேற்பட்ட மனுஷர் 40 வருடம் வனாந்தரப் பயணத்தில் மரித்துப் போனார்கள் என்று வாசிக்கிறோம். ஆகவே, சங்கீதம் 90:10-ல் குறிப்பிடுகிறபடி, அநேகருடைய ஆயுசு நாட்கள் பொதுவாக மோசேயின் நாட்களிலும், 70-பதிலிருந்து 80-வரைக்கும் காணப்படுகிறது.

சங்கீதம் 90:2 - "பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்கு முன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்." நம்முடைய நித்தியமான சிருஷ்டிகரைக் குறித்து கூறப்படும் பிரபலமான ஒரு விமர்சனமாகும். தேவபக்தியுள்ள வீடுகளிலிருக்கும் பிள்ளைகளுக்கும் இவ்வாக்கியம் கற்றுக் கொடுக்கப்படுகிறது. மேலும் நம்முடைய குறுகிய நேரத்தைக் குறித்து, மனுஷ சிந்தை இதனால் புத்திரராய் தோன்றுகிறது. முடிவில்லா எல்லைக்குத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவது கற்பனைக்கு அப்பாற்பட்டதாய் இருக்கிறது. ஆயினும் ஒருவனும் தான் வந்த வழியில் திரும்பிப்போகக்கூடிய அனுபவங்களை கற்பனை செய்து பார்ப்பதில்லை.

ஆயினும் இக்காரியத்தை ஆழமாக உள்நோக்க விஞ்ஞானம் நமக்கு சிறிதளவு உதவி செய்கிறது. ஆல்பர்ட் அயன் ஸ்டீன் நாட்கள் துவங்கி இந்த உலகத்தில் வேகம், நிறுவை, காலம் - இவ்வனைத்தையும் நிலையான அளவிடுவதற்குக் கற்றுக் கொண்டோம். நேரம் அதிகமாகச் செல்வதும், மெதுவாகச் செல்வதும் காணக்கூடியவரின் வேகத்தின் விகிதத்தைப் பொருத்தே உள்ளது. உண்மையில் இந்த உலகத்தில் காலத்தைக் குறித்த கருத்து நம்முடைய சிருஷ்டிகளுக்கு தொடர்புள்ளதாய் இருக்கிறது. நம்முடைய சிருஷ்டிகர், எதையும் துவங்குவதற்கு முன்னாக அதாவது, இன்று பிரபலமாக அழைக்கப்படும் பிக்பேங் கூற்று துவங்குவதற்கு முன் இவைகள் எதுவும் காணப்படவில்லை. ஆகவே இந்த உலகத்தைச் சார்ந்த இயற்கை அமைப்புகளைப் பொறுத்தே காலங்கள் சிருஷ்டிக்கப்பட்டது என்று உணருகிறோம். தேவன் அதற்கு முன்னதாகவே எல்லாவற்றிற்கும் மேலாக எந்த எல்லைகளுக்கும் உட்படாதவராய் இருக்கிறார் என்ற கருத்தை நம்முடைய சிந்தை ஒரு சிறிய அளவில் புரிந்து கொள்வதற்கு உதவி செய்கிறது. - "நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாய் இருக்கிறீர்."

இரண்டாம் வசனத்தின் முதல் பகுதி யோபு 38:4-ம் வசனத்தை நமக்கு நினைவுப்படுத்துகிறது. அதில் பிதாவாகிய யேகோவா தேவன் யோபுவிடம், சுழல் காற்று பற்றி கேள்வி எழுப்பினார். யோபு 38:4 - "நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய்? நீ அறிவாளியானால் அதை அறிவி." சிலர் ஆதியாகமம் 10:21-ம் வசனத்தில், யோபாப் என்று அழைக்கப்படும் அதே நபர் யோபுவாக இருக்கலாம் என்று சிலர் கருதுகிறார்கள். இதில் நியாயமாகவும்கூட தோன்றுகிறது. (யோபாப் மற்றும் யோபு இருவருமே கிழக்கு தேசத்தாராகக் குறிப்பிடப்படுகிறார்கள். - ஆதியாகமம் 10:29; யோபு 1:3 என்ற வசனங்கள் ஒப்பிட்டுப் பார்க்கவும். மோசேயைப்

பொறுத்தவரையில் அவருடைய காலத்தில் யோபுவைப் பற்றி அவர் நன்கு அறிந்திருக்க வேண்டும். ஒருவேளை அதினிமித்தமாக மோசே துாண்டப்பட்டு சங்கீதம் 90:2-ம் வசனத்தை எழுதியிருக்கக்கூடும்.

**வசனம் 3:10**

சாபத்திலிருந்து சீர் பொருந்தக்கூடிய மனுக்குலத்தின் அனுபவங்களைக் குறித்து 3-10 வசனங்கள் சுருக்கமாக மேற்பார்வையிடுகிறது. "சங்கீதம் 90:3-10 - "நீர் மனுஷரை நிர்த்தூளியாக்கி, மனுபுத்திரரே, திரும்புங்கள் என்கிறீர். உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக்கழிந்த நாள்போலவும் இராச்சாமம்போலவும் இருக்கிறது. அவர்களை வெள்ளம்போல் வாரிக்கொண்டுபோகிறீர்; நித்திரைக்கு ஒத்திருக்கிறார்கள்; காலையிலே முளைக்கிற புல்லுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அது காலையிலே முளைத்துப் பூத்து, மாலையிலே அறுப்புண்டு உலர்ந்துபோம். நாங்கள் உமது கோபத்தினால் அழிந்து, உமது உக்கிரத்தினால் கலங்கிப்போகிறோம். எங்கள் அக்கிரமங்களை உமக்கு முன்பாகவும், எங்கள் அந்தரங்க பாவங்களை உமது முகத்தின் வெளிச்சத்திலும் நிறுத்தினீர். எங்கள் நாட்களெல்லாம் உமது கோபத்தால் போய்விட்டது; ஒரு கதையைப்போல் எங்கள் வருஷங்களைக் கழித்துப்போட்டோம். எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே; அது சீக்கிரமாய்க் கடந்து போகிறது, நாங்களும் பறந்துபோகிறோம்.

இந்த ஒரு வசனப்பகுதி தேவனுடைய கோபாக்கினைக்கும் வருங்கால நம்பிக்கைக்கும் உள்ள குறிப்பிட்ட தொடர்பான காலத்தைக் குறிப்பிடுகிறது. சங்கீதம் 90:4 - "உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக்கழிந்த நாள்போலவும் இராச்சாமம்போலவும் இருக்கிறது."

ஒருநாள் ஆயிரம் வருடங்கள் என்ற வசனப்பகுதி திறவுக்கோலாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த உலகம் பாவம் மற்றும் மரணத்தின் கீழ் கடந்த ஆறாயிரம் வருடங்கள் துன்பப்பட்டு இருக்கிறது. இந்த வசனப்பகுதிக்கு ஒப்பிட்டு நாம் பார்க்கையில் இதை ஆறு நாட்களாக எடுத்துக் கொள்ளலாம். இனி வரக்கூடிய ஆயிரம் வருடத்தை வரக்கூடிய ஒரு நாளாக இந்த உலகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. விசுவாசத்தில் உள்ளவர்கள் இந்த யுகங்களின் இடைப்பட்ட பகுதியில் இருக்கிறோம் என்பதை தெளிவாக உணர்ந்திருக்கிறோம். ஆனால் இந்த உலகம் இந்த யுகங்களின் மாற்றங்களில் காணப்படும் குழப்பங்களை மட்டுமே காண்கிறது. அதின் பொருளையும் ஒரு புதிய நாளின் துவக்கத்தையும் அறியாதிருக்கிறது. இந்த உபத்திரவங்களுக்குப் பின் இஸ்ரயேலில் உள்ள சீர் பொருந்தப்பட்ட தீர்க்கதரிசிகளின் சமாதானத்துக்குரிய அழைப்பை "மெல்லிய சத்தமாக" கேட்பார்கள். (1 இராஜ 19:12; சகரி 8:20-22)

ஆறு நாட்கள் வேலை செய்து ஏழாம் நாளில் ஓய்வு எடுப்பது இஸ்ரயேலில் ஒரு பழக்கமாகக் காணப்படுகிறது. அந்த ஓய்வு நாளில் உலகத்தின் வேலைகள் ஒதுக்கி வைக்கப்பட்டு, ஆவிக்குரிய ஆராதனைகளுக்கும் உடல் ரீதியான புத்துணர்வைப் பெறுவதற்கும், ஓய்வு எடுப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது. லேவி 23:3 - "ஆறுநாளும் வேலை செய்யவேண்டும்; ஏழாம்நாள் பரிசுத்த சபைகூடுதலான ஓய்வுநாள், அதில் ஒரு வேலையும் செய்யவேண்டாம்; அது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் நாளாயிருப்பதாக."

கடந்த 6000 வருடங்களாக பாவம் மற்றும் மரணத்தின் சுமைகளுக்குக் கீழ் உபத்திரவங்களை அனுபவித்த மனுக்குலம் ஏழாம் ஆயிரம் வருஷத்தில் இவைகளை ஒதுக்கிவிட்டு தேவனைத் தொழுது கொள்வதற்காக அதை பரிசுத்தப்படுத்துவதை இந்த பழக்கம் அடையாளப்படுத்துகிறது. இதே கருத்தை எசேக்கியேல் தீர்க்கதரிசி தன்னுடைய ஒன்பதாவது நீண்ட அதிகாரத்தில் ஆயிரவருட ஆட்சியைக் குறித்து பேசுகிறார். எசே 46:1 - "கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: வேலைசெய்கிற ஆறுநாளிலும் கிழக்குக்கு எதிரான உட்பிராகாரத்தினுடைய வாசல் பூட்டப்பட்டிருந்து, ஓய்வுநாளிலும் மாதப்பிறப்பிலும் திறக்கப்படக்கடவது." ஆயிரம் வருடங்களாக இந்த உலகம் வாசலுக்கு வெளிப்புறமாக நிற்பதையும், ஆயிரம் வருடத்தில் அவர்கள் தேவனிடத்தில் வந்து பிரமாணங்களைப் பெற்று அவரை தொழுது சேவிப்பதையும் காட்டுகிறது.

**தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களைக் குறித்து அசதியாய் இரார்**

ஆதாமின் தண்டனை நீண்டகாலமாக இருந்தபோதிலும், பாவம் மற்றும் கீழ்ப்படியாமையின் நீண்ட பாடங்கள் கடந்த கால நினைவுகளை சுருக்கமாக நினைவு கூறுவதற்கு அவைகள் வெறும் ஆறு நாட்களுக்குரிய உபத்திரவங்கள். அப்போஸ்தலராகிய பேதுரு இக்காரியத்தை தம்முடைய இரண்டாம் நிருபத்தில் குறிப்பிடுகிறார். மேலும், தேவன் தம்முடைய திட்டத்தைக் குறித்து என்றும் தாமதிப்பதில்லை என்பதை இவ்வசனங்களைக் கொண்டு விளக்குகிறார். 2 பேதுரு 3:8, 9 - "பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம்வருஷம்போலவும், ஆயிரம் வருஷம்

ஒருநாள்போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்கவேண்டாம். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்."

**இராஜாமம்**

யுகங்களைப் பற்றிய தேவனுடைய திட்டத்தில் விசுவாசமுள்ள சகோதரர் மத்தியில், ஆயிரம் வருடங்கள் ஒருநாளுக்கு ஒப்பிடப்படும் இந்த அடையாளம் பிரபலமானது. ஆயினும் சங்கீதம் 90:4-ம் வசனத்தின் இரண்டாவது பகுதி மற்றொரு அடையாளத்திற்கு உறுதுணையாய் இருப்பதை குறைந்த பட்சமான கவனம் செலுத்தப்படுகிறது. இந்த இரண்டாவது உருவகமும் அதே கருத்தை கற்பிக்கிறது. ஆயிர வருடங்கள் கொண்ட காலப்பகுதியை ஒரு இரா- ஜாமத்திற்கு ஒப்பிட்டுப் பேசப்படுகிறது.

இரவில் நான்கு ஜாமங்கள் இருப்பதாக வசனங்கள் காண்பிக்கிறது. இவைகள் சூரிய அஸ்தமனத்திலிருந்து மறுநாள் சூரியன் உதிக்கும் வரையில் (6pm to 6am) மூன்று மணி நேரங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு ஜாமம் என்று அழைக்கப்படுகிறது. (மாற்கு 13:35-ம் வசனம் இந்த நான்கு ஜாமங்களைக் குறித்து விவரமாகக் கூறுகிறது.)

பகலின் மணி நேரங்கள் அதாவது, காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரைக்கும் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. அதில் காலை இரண்டு பகுதிகளாகவும், மாலை இரண்டு பகுதிகளாகவும் பிரிக்கப்படுகிறது. இப்படியிருக்க இரா-ஜாமம் ஆயிரவருட கால அளவை அடையாளப்படுத்தினால் பகலின் மற்ற நான்கு பகுதிகளும் ஆயிரவருடக்கால அளவை அடையாளப்படுத்த வேண்டும். விடியலிலிருந்து ஆறு பகுதிகள் நம்மை நடு இரவில் அழைத்துச் செல்கிறது. இதுவே இந்த உலகத்திற்கு உண்டான இக்கட்டுக்காலம். அப்பொழுது ஆயிரம் வருட ஆட்சி அறிமுகப்படுத்தப்படும். (யாத்திராகமம் 12:29; அப்போஸ்தலர் 27:27 வசனங்களை ஒப்பிட்டுப் பார்க்கவும்.

**மற்றொரு நிலை**

மனுக்குலத்திற்காக தேவனுடைய திட்டத்திலுள்ள ஏழாயிரம் வருடங்களுக்கு அல்ல, மாறாக சுவிசேஷ யுகத்தில் ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட மற்றொரு சிறிய அளிவிலான காரியம் பொருத்திப் பார்க்கப்படுகிறது. எடுத்துக் காட்டாக, லேவியராகமம் 8:33-ம் வசனம் ஏழுநாள் நடப்பிக்கப்பட்ட ஆசாரியத்துவத்தின் அபிஷேகத்தைக் குறித்து பேசுகிறது. இது சுவிசேஷ யுகத்தை அடையாளப்படுத்துகிறது. இதனுடைய ஏழு காலங்கள் வெளிப்படுத்தல் மற்றும் மூன்றாம் அதிகாரத்தில் காட்டப்படுகிறது.

சுவிசேஷ யுகத்தின் ஏழு பகுதிகள் மற்றொரு எடுத்துக் காட்டான எரிகோவைச் சுற்றின யோசுவாவின் அந்த ஏழு நாட்களை அடையாளப்படுத்துகிறது. (யோசுவா 6:12-16; வெளிப்படுத்தல் 8:2)

சுவிசேஷ யுகத்தின் ஏழு பகுதிகள் பகலில் காணப்படும் நான்கு பகுதிகள் மற்றும் அதை தொடர்ந்து வரும் மூன்று இரா-ஜாமங்களை அடையாளப்படுத்துகிறது. விடியலிலிருந்து ஆறு பகுதிகள் நம்மை நடு இராத்திரிக்கே அழைத்துச் செல்கிறது. அதாவது, சுவிசேஷ யுகத்தின் ஆறு காலங்கள் முடிவடைகிறது. சரியாக நடு இராத்திரிக்குப் பின் ஏழாம் சபையாகிய லவோதேக்கியா துவங்குகிறது. (வெளிப்படுத்தல் 3:14) அது சுவிசேஷ யுகத்தின் அறுவடைக் காலமாயும் இருக்கிறது. (வெளிப்படுத்தல் 3:20; லூக்கா 12:36)

இப்படியாக நடு இராத்திரி சபையின் அறுவடையின் துவக்கத்தைக் குறிக்கிறது. எடுத்துக்காட்டாக, "இதோ மணவாளன்" என்று மத்தேயு 25:6 - "நடுராத்திரியிலே: இதோ, மணவாளன், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று." சங்கீதம் 119:62 - "உமது நீதியான நியாயத்தீர்ப்புகளினிமித்தம், உம்மைத் துதிக்கும்படி பாதிராத்திரியில் எழுந்திருப்பேன்" என்று காண்கிறோம்.இந்த ஒரு நிலையில் அறுவடையின் முடிவு மூன்றாம் ஜாமத்தின் முடிவிலும், நான்காம் ஜாமத்தின் துவக்கத்திலும் நடைபெறும். இக்கருத்து மத்தேயு 14:25-ம் வசனத்தோடு மிக அருமையாக இசைந்து காட்டப்படுகிறது. "இரவின் நாலாம் ஜாமத்திலே, இயேசு கடலின்மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார்." இவ்வசனம் மிகுந்த சீறும் புயல் போன்ற உபத்திரவங்கள் மத்தியில் அறுவடையின் முடிவில் இயேசு தம்முடைய பரிசுத்தவான்களை ஏற்றுக் கொள்வது இக்காட்சி சித்தரிக்கிறது.

**சங்கீதம் 90:10**

சாபத்தின் கீழ் இருக்கும் ஜனங்களின் மரணத்தைக் குறித்து , 10-ம் வசனம் உருவகமாகப் பேசுகிறது. நிச்சயமாக ஜனங்கள் எங்கும் பறந்து செல்வதில்லை. நம் மத்தியில் வாழக் கூடியவர்கள் மரிக்கும்பொழுது இனி அவர்களை ஒருபோதும் காணமுடியாது என்ற எண்ணத்தை கவிதை நடையில் இவ்வசனம் விவரிக்கிறது. மரணத்தில் என்ன சம்பவிக்கும் என்பதை சங்கீதம் 146:4-ம் வசனம்

கூறுகிறது. "அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்."

நம்முடைய சரீரங்கள் புதைக்கப்படுவதினால் சிதைந்து மீண்டும் அவைகள் எடுக்கப்பட்ட அந்த மண்ணின் கூறுகளாகத் திரும்புகிறது என்ற உண்மையை , "மண்ணுக்குத் திரும்புதல்" என்று மேற்கூறப்பட்ட வசனம் கூறுகிறது. மாறாக எந்த நிலையிலும் ஜனங்கள் தங்களுடைய கல்லறைக்குப் பறந்து செல்வது இல்லை. ஆயிர வருடத்தில் தாங்கள் உயிரடையும் நேரம் வரையிலும் எந்தவித உணர்வின்றி அவர்கள் மரணத்தில் ஆழ்ந்த நித்திரை செய்கிறார்கள். அதுவரைக்கும் பிரசங்கி 9:10 - "செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்; நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே."

மரித்த அனைவரும் சொல்லர்த்தமான இந்த பூமியில் புதைக்கப்படுவதில்லை. ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் வெவ்வேறு விதமான மரணங்கள் வெவ்வேறு சூழ்நிலைகளில் நடைபெறும். சிலர் எரிக்கப்படுகிறார்கள், சிலர் கடலிலே மூழ்கி மரிக்கிறார்கள், சிலர் மிருகங்களால் புசிக்கப்படுகிறார்கள் அல்லது போர்க்களத்தில் அழுகிப் போகிறார்கள். ஆயினும் வருங்கால உயிர்த்தெழுதலில் பழைய சரீரங்களைக் குறித்து எந்த காரியமும் குறிப்பிடப்படவில்லை.

கிறிஸ்தவ யுகத்தில் தேவனிடம் அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் எல்லா வழியிலும் தங்களுடைய நம்பிக்கைகளை மிக உன்னதமாகவும், அற்புதமாகவும் கொண்டிருக்கிறார்கள். தேவன் தம்முடைய பரிசுத்தவான்களை பரலோக ஜீவிகளாக ஆவிக்குரிய சரீரத்தில் உயிர்த்து எழுப்புகிறார். இக்காலத்தில் விசுவாசத்தோடு வாழ்ந்து தேவனிடத்தில் முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களுக்கு இக்குறிப்பான ஆசீர்வாதத்தை அவர்களுக்குப் பாதுகாத்து வைத்திருக்கிறார்.

கிறிஸ்து முன்னதாகவே இந்த பூமிக்குத் திரும்பி அறுவடை செய்யக்கூடிய சுவிசேஷ யுகத்தின் முடிவு காலத்தில் நாம் இருக்கிறோம். உயிர்த்தெழுதலும் முன்னதாகவே துவங்கிவிட்டது. பல நூற்றாண்டுகளுக்கு முன் மரித்த பரிசுத்தவான்களும் எழுந்துவிட்டார்கள். மாம்சத்திலிருக்கும் மீதி சபையினர் மரித்த உடனேயே உயிரடைகிறார்கள். அறுவடையின் முடிவில் சபை நிறைவடைந்து மகிமைப்படும் நாள்வரைக்கும் இச்செயல் நடந்து கொண்டிருக்கும். மேலும் அதற்குப்பின் திரள்கூட்டத்தின் இறுதி நபர் தங்களுடைய வீட்டுக்குச் செல்லும் வரையில் இவைகள் நடைபெறும்.

**சங்கீதம் 90:11-17**

தேவனுடைய கோபாக்கினையின் வல்லமையை 11-ம் வசனம் குறிப்பிடுகிறது. மனிதர்கள் உச்சக்கட்டத்தை அடையும் போது, மரணமாகிய தண்டனையை அடைந்துவிடுகிறார்கள். ஒருவரும் அதிலிருந்து தப்பிப்போவதில்லை. சிலர் ஆயிரவருட ஆட்சிக்குள் வாழ்ந்து சாபத்திலிருந்து விடுபட்டு கல்லறைக்குச் செல்வதற்கு முன் அந்த சாபத்தின் பலன்களிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். ஆனால் குறித்த காலம் வரும்வரை இச்செயல் தொடர்ந்து நடைபெறுகிறது.

இதற்கிடையில் பக்தியுள்ள இருதயங்களைப் பெற்றவர்கள் தங்களுடைய காலத்தை ஞானமாக செலவழிக்கும்படி ஆலோசனைக் கூறப்படுகிறது. சங்கீதம் 90:12 - "நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்." நம்முடைய காலம் குறுகலாய் இருப்பதை - நம்முடைய நாட்கள் எண்ணப்பட்டிருக்கிறது என்ற வார்த்தைகள் - நம்முடைய காலம் மிகக் குறைவு என்று சுட்டிக்காட்டுகிறது. நம்முடைய இருதயத்திலும், சிந்தையிலும் உள்ள தெய்வ பக்தியின் இலக்கை விட்டு நம்முடைய கவனத்தை திசை திருப்பக்கூடிய சகல குறுக்கீடுகளையும் தவிர்க்க வேண்டும்.

ஒரு மனுஷனுக்கு தெய்வ பக்தி இயல்பாக வருவதில்லை. நாம் இயல்பான வாழ்க்கையின் அலைகளை எதிர்த்து, நம்முடைய சிந்தைகள், மனது மற்றும் நேரத்தை ஆவிக்குரிய காரியங்களுக்காக செலவிட வேண்டும். நமக்கும் நம்மை சார்ந்தவர்களுக்கும் வேண்டிய தேவைகளை சந்திப்பதற்காக பெற்ற பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு நம்முடைய வாழ்க்கையில் படக்கூடிய போராட்டங்கள் நம்முடைய குணாதிசயங்களை வளர்க்க வேண்டும். எவ்வித சோதனைகளிலும் நாம் தடம் புரளாமல் செல்ல வேண்டும்.

13-லிருந்து 17 வசனங்கள் வரை இக்காலத்து பிரச்சனைகளின் முடிவை எதிர் நோக்குகிறது. மேலும் ஒரு நல்ல காலம் வரும் என்று ஆவலோடு எதிர்பார்க்கிறது. தேவனிடத்தில் உடன்படிக்கை செய்தவர்கள் திரைக்கு அப்பால் மகிமையில் களிகூறுவார்கள். இந்த உலகத்தின் மனுக்குலமோ ஆயிரவருட ஆட்சியின் ஆசீர்வாதங்களை எதிர்பார்த்திருப்பார்கள்.



# சங்கீதங்களை குறித்து, லூத்தர்

“தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது.” (சங்கீதம் 19:10)

சங்கீதங்களில் நன்றி செலுத்துவதிலும், துதி செலுத்துவதிலும் தவிர மதுரமான மகிழ்ச்சியின் குரலை நாம் எங்கு தேடுவது? பக்தியுள்ள அனைத்து இருதயங்களையும் நோக்கிப் பார்த்தால், ஒரு அழகான தோட்டத்தைப்போல பரலோகத்தைப்போலவே காணப்படும். எவ்வளவு மென்மையானதும், நறுமணம் வீசக்கூடிய அழகான மலர்களும், விதவிதமானப் பூக்களும் தேவனையும் அவருடைய நன்மைகளையும் குறித்த மகிழ்ச்சியான சிந்தைகள் காணப்படும்.

மற்றொரு பக்கத்தில் மிகவும் வேதனையானதும், துக்ககரமானதும், ஆழமான துக்கத்தின் வெளிப்பாடுகளை சங்கீதங்களைத் தவிர வேறு எங்கு காணமுடியும்? எல்லா பரிசுத்தவான்களுக்கும் கொடுக்கப்பட்ட ஒரு சிறிய புஸ்தகம் இந்த சங்கீதப் புஸ்தகம். இதில் ஒவ்வொரு மனுஷனும் எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் சங்கீதங்களை தன்னுடைய சொந்த வாழ்க்கையில் பொருத்திப் பார்க்கலாம். அவருக்காகவே எழுதப்பட்டது போல் தோன்றும். அதைக்காட்டிலும் மேலான அளவுக்கு ஒன்றையும் வெளிக்காட்ட முடியாது.

மற்ற புத்தகங்களில் வார்த்தைகள் மட்டும் எடுத்துக் காட்டுகளின் வழியாக நாம் இவைகளைச் செய்ய வேண்டாம் என்று கற்றுக் கொள்கிறோம். இது நமக்கு கற்பிக்க மட்டும் அல்ல, தேவனுடைய வார்த்தைகளை நிறைவேற்றுவதற்கு அவைகளைக் கைக்கொண்டு பழக்கப்படுத்தும் முறைகளையும் கற்றுக் கொடுக்கிறது. ஏனெனில், தேவனுடைய பிரமாணங்களை சுயமாக நிறைவேற்றுவதற்கும், கிறிஸ்துவின் சாயலைப் பெறுவதற்கும் நம்மிடத்தில் வல்லமை ஏதுவுமில்லை. தேவ சித்தத்தை நிறைவேற்றி குமாரனுடைய சாயலைப் பெறுவதற்கு நாம் மனதார விரும்பி ஜெபித்தால் மட்டும் போதும். அதற்கு பின் நாம் ஆவிக்குரிய காரியங்களை செயல்படுத்தி துதிகளையும், நன்றிகளையும் ஏறெடுக்க வேண்டும். சங்கீதத்தில் வேறென்ன உண்டு? தேவனிடத்தில் ஜெபிப்பதும், அவருக்கு துதிகளை ஏறெடுப்பதும் தானே, ஆகவே இது ஒரு பாமாலையின் புத்தகம்.

ஆகவே தேவனுடைய மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட ஆவியானது, அநாதைகளுக்குத் தந்தையும், குழந்தைகளுக்கு ஆசிரியருமாக இருக்கிறது. அப்போஸ்தலர் கூறியபடி நாம் எவ்வாறு ஜெபிக்க வேண்டும் என்று அறியாமல் இருப்பதுபோல, நாமும் அறியாதவர்களாக நம்முடைய பெலவீனங்களுக்கு உதவி செய்ய விரும்புபவர்களாய் இருக்கிறோம். பள்ளிச் செல்லும் குழந்தைகள் பாடப்புத்தகங்களை எடுத்து வராத பட்சத்தில் பெற்றோர்களிடம் அவர்களை மீண்டும் அனுப்புவதுபோல, நாம் பரலோகத் தந்தையை நெருங்குவதற்கு நம்மை நாம் ஆயத்தப்படுத்துவதற்கு ஒரு புத்தகத்தைக் கொடுத்திருக்கிறார். நாம் என்ன செய்ய வேண்டும் என்றும், யாரை மாதிரியாகப் பின்பற்ற வேண்டும் என்றும், அவர் எதின் மூலம் கற்பித்திருக்கிறார் ? ஆகவே ஒரு மனுஷனுக்கு நித்தியமான இரட்சிப்பைப் பெறுவதற்கு சகல காரியங்களும் அதில் கொடுக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட அன்பான இரக்கமுள்ள தேவனை பெற்றிருக்கிறோம். நம்மைக் காட்டிலும் நித்தியமாக ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் யாராக இருக்கக்கூடும்.

**(From “A song of Thanksgiving,”**

**Br, Will Siekman, November 1954 Herald**

# நீதிமான்களை ஆசீர்வதித்தல்



"துன்மார்க்கனுடைய வீட்டில் கர்த்தரின் சாபம் இருக்கிறது, நீதிமான்களுடைய வாசஸ்தலத்தையோ அவர் ஆசீர்வதிக்கிறார்." (நீதிமொழிகள் 3:33)

பூரணமான உடல் நலம் பெறவும், ஐசுவரியவான்களாக மாறவும், இன்னும் அநேக காரியங்களை பெற்றுகொள்ள உங்கள் தொலைக்காட்சிப் பெட்டிகளின் உதவியை நாடலாம். நீங்கள் அவைகளைக் கண்டு அதற்கான பணத்தைச் செலுத்தி அவர்களுடைய அமைப்புக்கு உண்மையோடு கீழ்ப்படிந்தால், நீங்கள் அதை பெறலாம். இதில் முக்கியமான காரியம் என்னவெனில், இவைகள் விற்பனைக்குரிய அமைப்புகளாகக் காணப்படுகிறது. அதேபோல, ஞாயிறு காலை பல ஊழியர்கள் பூரண உடல் நலனுக்காகவும், அபரிதமான ஐசுவரியங்களுக்காகவும் விசுவாசம் மற்றும் ஜெபத்தின் மூலமாக செய்தி கொடுப்பதைக் காணலாம். கிறிஸ்தவர்கள் சுபிட்சமாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புவதாக கூறுகிறார்கள். அதற்காக அவர்கள் வேதாகமத்தில் வரும் சாலொமோன், ஆபிரகாம் மற்றும் யோபு போன்ற பாத்திரங்களைச் சுட்டிக்காட்டுகிறார்கள். தேவனுடைய பாதுகாப்பையும், ஆசீர்வாதங்களையும் பெறுவதற்கான வாக்குறுதிகளை மேற்கோள் காட்டுகிறார்கள். கேளுங்கள் அப்பொழுது கொடுக்கப்படும். பெற்றவுடன் எங்களுக்கு அனுப்பும் காசோலையை மறந்துவிடாதிருங்கள்?

### நீதிமான்கள் துன்பப்படுவதின் காரணமென்ன?

தேவன் தம்முடைய ஜனங்களை சகல தீமையினின்றும் இரட்சித்து எல்லா ஐசுவரியங்களோடும் உடல்நலத்தோடும் தேவன் நடத்துவார் என்று வேதாகமம் கற்பிக்கிறதா? இதற்காக நாம் விண்ணப்பிக்கலாமா? நல்ல சுகத்தையும், பெலத்தையும், ஐசுரியங்களையும் பெற்று தீமைகளினின்று இரட்சிக்கப்படுவதற்காக தேவன் நடத்துகிறார் என்பதைப் போல சில சங்கீதங்கள் முதலில் வாசிக்கப்படும்போது காட்சியளிப்பதுண்டு.

சங்கீதம் 112:1-3 - "அல்லேலூயா, கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் சந்ததி பூமியில் பலத்திருக்கும், செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும். ஆஸ்தியும் ஐசுவரியமும் அவன் வீட்டிலிருக்கும்; அவனுடைய நீதி என்றைக்கும் நிற்கும்."

சங்கீதம் 91:10 - "ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது."

சங்கீதம் 121:8 - "கர்த்தர் உன் போக்கையும் உன்வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார்."

இதை முதலில் வாசிக்கும்போது, நம்முடைய சிந்தையில் இவ்வாறாகத் தோன்றலாம். ஆனால் இயேசு தம்முடைய பிதாவினிடத்தில் முழுமையான பயபக்தி கொண்டு இருப்பினும் அவர் விடுவிக்க வந்தவர்களின் கைகளில் எவ்வளவு பாடுகளை அனுபவித்தார். இயேசு எந்தவிதமான தீமைகளிலிருந்தும் காக்கப்படவில்லை. உண்மையில் சாத்தானை முகமுகமாய் சந்தித்து அவர் மூன்று முறை சோதிக்கப்பட்டதாக சுவிசேஷங்கள் விவரிக்கிறது. (மத்தேயு 4) ஒருவரும் பாடுபடக்கூடாது என்பதற்காக இயேசு இந்த அனுபவங்களைச் சகித்தாரா? நிச்சயமாக இல்லை. ஏனெனில், ஆதிக்கால சபையில் இயேசுவின் அப்போஸ்தலர்களும், சீஷர்களும் மிகுதியான பாடுகளின் உபத்திரவங்களையும் அடைந்தார்கள். புறஜாதிகளுக்கு இராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவிக்கும் ஊழியத்தில் அப்போஸ்தலராகிய பவுல் எவ்வளவு பாடுகளை அடைந்தார்? 2 தீமோத்தேயு 3:12 - "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்."

காரியங்கள் இப்படியிருக்க இதற்கு முரண்பாடான சங்கீதங்களை நாம் எவ்வாறு விவரிப்பது? மழை பெய்யும்போது ஒரு மனுஷன் குடைப்பிடித்து நடந்தால், அவன் மேல் மட்டும் மழை பெய்யாமல் காக்கப்படுவதுபோல, இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் சகல தீமைகளிலிருந்தும் காக்கப்படுவார்கள் என்று புரிந்து கொள்ளப்படுகிறது. ஆயினும் இயேசுவின் சீஷர்கள் மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் வேதனைகளை அநுபவிப்பார்கள் என்று மற்ற சங்கீதங்கள் குறிப்பிடப்படுகிறது.

சங்கீதம் 34:17-19 - "நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார். நொறுங்குண்ட

இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார். நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்."

இன்று நீதிமான்கள் நீதியுள்ள வாழ்க்கையை வாழ்வதினிமித்தமாக வரும் துன்பங்களினால் மனமுடைந்து வேதனைப்பட்டு கூக்குரலிடுவதைக் காணலாம். யார் இந்த நீதிமான்?

சங்கீதம் 34:13, 14 - "உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள். தீமையை விட்டு விலகி, நன்மை செய்; சமாதானத்தைத் தேடி, அதைத் தொடர்ந்துகொள்."

தீமையான காரியங்களைப் பேச மறுத்து மற்றவர்களைக் குறித்து தீமையான காரியங்களை சிந்திக்காமல், அவைகளை மேற்கொள்ளக்கூடிய சூழ்நிலைகளை தவிர்த்து தங்களுடைய வாழ்க்கையில் நற்கிரியைகளை நடப்பித்து உபத்திரவப்படுவார்கள். தேவனுடைய பார்வையில் இப்படிப்பட்ட நீதிமான்கள் நீதியையும், சமாதானத்தையும் ஸ்தாபிப்பார்கள். இதன் காரணத்தினால் இவர்கள் வேட்டையாடப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்களை தேவன் அவர்களுடைய உபத்திரவங்களிலிருந்து விடுவிப்பார் என்று சங்கீதங்கள் தேவனுடைய வாக்குத்தத்தங்களை எடுத்துரைக்கிறது. இயேசுவின் சீஷர்கள் பல உபத்திரவங்களை அடைந்தாலும், பூரணப்படுவதற்குமுன் மரணத்துக்கு ஏதுவான தீமையிலிருந்து காக்கப்படுவார்கள்.

**தீமையின் அனுமதி**

ஒழுக்கமும் நீதியும் உள்ள வாழ்க்கையை வாழ்வதற்கு ஒருவர் உபத்திரவப்பட வேண்டும் என்ற தேவனுடைய சித்தத்திற்கு காரணம் என்ன? நம்முடைய பாடுகளையும், வேதனைகளையும் தேவனால் உணர முடியுமா? நிச்சயமாக முடியும். அவர் துவக்கத்திலிருந்து முடிவு வரைக்கும் சகலத்தையும் அறிந்தவர். (ஏசாயா 46:10) அவர் காலங்களையும், நேரங்களையும் ஏற்படுத்துகிறவர். (பிரசங்கி 3:1-8) அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே ஈடு பலியின் ஆட்டுக் குட்டியை தேர்வு செய்தவர். (1 பேதுரு 1:19, 20) நாம் ஜெபிப்பதற்கு முன்னதாகவே நம்முடைய தேவைகளை அறிந்தவர். (மத்தேயு 6:8) கிறிஸ்து தம்முடைய வல்லமையினாலும், மகிமையினாலும் ஜாதிகளை ஆட்சி செய்யும் நேரத்தை அறிந்தவர். (மத்தேயு 25:31)

தேவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் பரிபூரணமான உடல் நிலையைக் கொடுத்திருந்தார். (நோயற்ற பூரணமான சரீரங்கள்) மற்றும் பூமிக்குரிய ஐசுவரியத்தையும் கொடுத்திருந்தார். (பூமியின் மேல் ஆளுகை) இதற்குப் பதிலாக தேவன் எதிர்பார்ப்பது என்ன? ஆதியாகமம் 2:17 - "ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்." இந்த ஒரே ஒரு கற்பனைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று எதிர்பார்த்தார். இந்த பிரமாணத்துக்கு கீழ்ப்படியாமையின் தண்டனையாக மரணம் முன் நிர்ணயிக்கப்பட்டது.

அவர்கள் நித்தயமாக ஜீவிப்பதற்கு விலக்கப்பட்ட அந்த நிலத்தின் கனியை அவர்கள் புசிக்க வேண்டிய அவசியம் இல்லாதிருந்தது. ஏனெனில், ஏதேன் தோட்டத்தில் பல சுவையான கனிகள் உணவாக அளிக்கப்பட்டிருந்தது. இப்படியிருக்க விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசிப்பதற்கு இவர்கள் முற்பட்டதின் காரணம் என்ன? சாத்தான் என்றும், பிசாசு என்றும் அழைக்கப்பட்ட லூசிபர் (1 பேதுரு 5:8) அந்த கனியைப் புசிப்பதன் பலன்களைக் குறித்து ஏவாளிடம் பொய் சொல்லி அவளை வஞ்சித்தது. ஆயினும் ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை. அவர் மனப்பூர்வமாக தேவனுடைய பிரமாணத்தை மீறி அந்த கனியை மனப்பூர்வமாய் புசித்தார். (1 தீமோத்தேயு 2:14)

தேவன் இந்த வஞ்சனைகளைத் தடுத்திருக்கலாமா? நிச்சயமாக முடிந்திருக்கும். ஆயினும் பாவம் மற்றும் கீழ்ப்படியாமையின் விளைவுகளைக் குறித்த பாடங்களைக் கற்றுக் கொண்டு, தேவன் மேல் உள்ள பயபக்தியின் முக்கியத்துவத்தை அறிந்து, நித்தியமாக அவரோடு இசைந்து வாழ்வதற்கான வாஞ்சையை அவர்களுக்குள் ஏற்படுத்துவதற்காகவே, இவைகளை தேவன் அனுமதித்தார்.

ஆதாம் மற்றும் ஏவாள் மரிக்க துவங்கினார்கள். அவர்கள் ஏதேன் தோட்டத்திலுள்ள ஒரு பரிபூரணமான வாழ்க்கையைத் தொலைத்து ஒரு கடுமையான சூழ்நிலையில் வாழ்வதற்குத் தள்ளப்பட்டார்கள். கீழ்ப்படியாமையின் பின்விளைவுகளினால் வந்த தொடர்ச்சியான வேதனைகளில் பல வருடங்கள் வாழ்ந்தபின் இரண்டாவது முறை அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும். அப்பொழுது அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிவதை தேர்வு செய்து கொண்டு ஏதேனுடைய பரிபூரணத்தையும் ஐசுவரியத்தையும் பெறுவார்கள். பரிபூரண பூமியாகிய பரதீசில் வாழ்வதற்கு வாய்ப்பு கிடைத்த இவர்களின் பின் சந்ததியார் அவர்கள் கடந்த காலத்தில் பட்டபாடுகளையும்,

வேதனைகளையும் நினைவு கூர்ந்து உடனடியாகக் கீழ்ப்படிதலை இறுக பற்றிக் கொண்டு தேவனோடு இசைந்து வாழ துவங்குவார்கள்.

### அனைவருக்கும் கொடுக்கப்படும் ஒரு வாய்ப்பு

ஆதாமுக்கும் அவருடைய சந்ததியாருக்கும் இப்படிப்பட்ட வாய்ப்பு கொடுக்கப்படுமா? 1 கொரி 15:22 - "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" என்று தெளிவாக வசனங்கள் அறிவிக்கிறது. ஜனங்கள் படிப்படியாக மரித்துப் போகும் காரணத்திற்கான பதிலை இவ்வசனத்தில் காணலாம். இவ்வழியாகவே ஒருவர் தங்களுடைய உடலமைப்புகளைப் பெற்றோரிடமிருந்து சுதந்தரித்துக் கொள்வதுபோல, பாவம் மற்றும் அதின் பலனான மரணத்தை ஆதாமின் மூலமாக ஒவ்வொரு மனுஷனும் சுதந்தரித்துக் கொண்டனர்.

ஆயினும் மனுஷனாகப் பிறந்த ஒவ்வொருவரும் உயிர்த்தெழுதலில் இச்செயல் முறை தலைக்கீழாய் மாறி ஜீவனை சுதந்தரித்துக் கொள்வார்கள் என்று வசனங்கள் வாக்களிக்கிறது. ஆதாமினால் அனைவரும் மரணத்தை சுதந்தரித்ததினாலே கிறிஸ்துவுக்குள் இவர்கள் ஜீவனைப் பெறுவார்கள். கிறிஸ்து மற்றும் அவருடைய சபையின் வழியாக இவர்கள் ஜீவனைப் பெற்று பூமியை ஆட்சி செய்வார்கள். (வெளிப்படுத்தல் 20:6) முழு மனுக்குலம் பிதாவாகிய தந்தைக்கு இசைவாக சீர் அமைக்கப்படும்.

இந்நாள் வரைக்கும் வாழந்து இந்த பூமியில் மரித்துப்போன ஒவ்வொரு மனுஷனும் மனுஷியும் குழந்தைகளும் மீண்டும் இந்த பூமியின் மேல் வருவதை சற்று சிந்தித்துப் பாருங்கள். அனைவரையும் வஞ்சித்து முழுமையாக வல்லமையை இழந்து இனி ஒருவரையும் மோசம் போக்கமுடியாத லூசிபரை சற்று சிந்தித்துப் பாருங்கள்! அனைவரும் தேவனுடன் இசைந்து வாழ்வதற்கான ஒரு வாழ்க்கையை - பரிபூரணமும் சமாதானமுமான சூழ்நிலையை கிறிஸ்து மற்றும் அவருடைய சபையும் ஏற்பாடு செய்வார்கள்.

ஆயிரவருட ஆட்சியின் முடிவில் ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் இறுதியாக சோதிக்கப்படுவார்கள். மனுஷனை சோதிக்க மீண்டும் சாத்தான் கட்டவிழ்க்கப்படுவான். (வெளிப்படுத்தல் 20:3) இது ஏதேன் தோட்டத்தில் நடந்த வஞ்சகத்தைப் போலல்ல. எல்லா மனுஷரும் தேவனோடு இசைந்திருக்கும் போது, பட்ட வேதனைகளையும், உபத்திரவங்களையும், மரணத்தையும் தேவனேடு இசைந்திருந்த போது அவர்கள் பெற்ற சமாதானம் சந்தோஷம் பரிபூரணத்தை அனுபவமாய் பெற்றிருப்பார்கள். இவர்கள் எந்த வழியை தேர்வு செய்வார்கள்? பெரும்பான்மையானோர் பரிபூரணமும், சமாதாமும், சந்தோஷத்தையும் தேர்வு செய்து பரலோகப் பிதாவினிடத்தில் விசுவாசத்தோடும் முழு கீழ்ப்படிதலோடும் தங்களை ஒப்புக் கொடுப்பார்கள்.

மனுஷன் தனிப்பட்ட முறையில் பாவத்தின் விளைவுகளையும் மரணத்தையும் கற்றுக் கொள்வதினால் தேவன் தீமையை அனுமதித்தது ஒரு ஆசீர்வாதமாக கருதப்படுகிறது. பாவத்தின் பலன்களை அறிவிக்காமல் வாய்ப்பளிக்கப்பட்டாலும் அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படிவதை தேர்வு செய்திருக்கலாம். ஆயினும் இவ்வளவு பாடுகளை அனுபவிப்பது அவசியமா? இன்று முழு மனுக்குலமும் உடல் ரீதியான வேலைகளையும் மன ரீதியான பிரச்சனைகளையும் மரணத்தில் அனுபவிக்கும் பிரிவுகளையும் நிச்சயமாக அனுபவிக்க வேண்டுமா?

தேவனுடைய ஞானத்தில் அனுமதிக்கப்படும் உபத்திரவங்களை கேள்விக்கு உட்படுத்தக் கூடாது. ஏனெனில், தீமையின் அனுமதியின் அடிப்படையில் இருக்கக் கூடிய கோட்பாட்டை பல எடுத்துக்காட்டுகளின் மூலம் நாம் சிந்திக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். மரணத்திற்குரிய வியாதிகள் வராதபடிக்கு குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவது வழக்கம். ஆனால் இந்த தடுப்பூசி அதிகமான வேதனையையும், கண்ணீரையும், உபத்திரவங்களைக் கொடுத்தாலும் அந்த குழந்தைகள் மரணத்துக்கு ஏதுவான வியாதியிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். ஆகவே இந்த தடுப்பூசி போடுவது, தற்காலிகமான வேதனை என்று பெற்றோர்கள் அறிந்திருப்பதுபோல, தேவனும் நம்மை குறித்து அறிந்திருக்கிறார். நித்தியமாக தேவனோடு இசைந்து வாழ்வதற்கான ஒரு வாய்ப்பிற்கான முழுமையான மதிப்பை அறிந்து கொள்வதற்கு சில வருடங்கள் பாவத்தின் விளைவுகளை உணர்ந்து கொள்ளும்படி தேவன் அனுமதிக்கிறார்.

இந்த முழு மனுக்குலம் இயேசு கிறிஸ்து மற்றும் சபையின் வழியாக தேவனுடைய பிரமாணத்திற்கு இசைவாக சீர்படுத்தப்படும் பொழுது அவர்கள் பரிபூரண சுகத்தின் நித்தியமான ஐசுவரியத்தை எப்பொழுதும் பெறுவார்கள். அவர்கள் அனுபவித்த பாடுகளையும் உபத்திரவங்களையும் திரும்பி பார்த்து, அவர்கள் பெற்றிருக்கக்கூடிய நித்திய ஜீவனில் களிக்கூறுவார்கள்.

### இயேசுவும் அவருடைய சபையும்

நித்தியமான பரிபூரணத்திற்குப் பதிலாக மனுஷர் அனுபவித்த பாடுகளைக் குறித்து நாம் ஆய்வு செய்தோம். இப்பொழுது தேவனோடு என்றென்றும் இசைந்து வாழ்ந்த அவருடைய குமாரனாம்

இயேசுவின் பாடுகள் மற்றும் உபத்திரவங்களின் முக்கியத்துவத்தைக் காணலாம்.

எபிரெயர் 5:8 - "அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு," இயேசு எப்பொழுதும் கீழ்ப்படிதல் உள்ளவராய் இருந்தார். ஆயினும் அவருடைய மூன்றரை வருட பூமிக்குரிய ஊழியத்திலும் பல எதிர்ப்பான சூழ்நிலைகளிலும் அவர் பரிபூரணமான கீழ்ப்படிதலை வெளிப்படுத்தினார். எபிரெயர் 5:9 - "தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி,"

இயேசு முன்னதாகவே ஒரு பரிபூரண குமாரனாக வாழ்ந்திருந்தாலும் ஒரு மனுஷனாக ஜனங்களுக்கு மேல் ஒரு அதிகாரம் உள்ள ஒரு புதிய நிலையைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற அனுபவங்களைப் பெற வேண்டியதாய் இருந்தது. எபிரெயர் 5:10 - "மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்." இப்பொழுது இயேசு ஒரு இராஜாவுக்குரிய அதிகாரத்தையும், பிரதான ஆசாரியனுக்குரிய பொறுப்பையும் பெற்றிருக்கிறார். அவர் மனுஷனாக வந்து பாவம் மற்றும் மரணத்தின் விளைவுகளை முழுமையாக அனுபவித்ததினால் எல்லா மனுஷரையும் மீண்டும் தேவனோடு இசைந்திருக்கச் செய்ய அவருடைய இந்த பூமிக்குரிய ஊழியம் பயனுள்ளதாய் இருக்கும். இயேசுவின் பாடுகளும், உபத்திரவங்களும், ஆயிரவருட அரசாட்சியின் போது சகல மனுக்குலத்தையும் உயிரோடு எழுப்பி தேவனைப் பற்றி கற்றுக் கொடுப்பதற்குரிய மகா பிரதான ஆசாரியனின் நிலைக்காக அவர் ஆயத்தப்படுத்தப்பட்டார்.

இயேசு தெய்வீக நிலையில் உயிர்த்தெழுந்தது போல, அவருடைய உண்மையுள்ள விசுவாசிகளும் உயிர்த்தெழுப்பப்படுவார்கள். (2 பேதுரு 1:4; 1 யோவான் 3:2)

இயேசுவுக்குப் பின் அவர்கள் படும்பாடுகள் தங்களுக்குள் தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக செய்யப்படும் எந்த காரியங்களையும் செய்ய தூண்டாதபடிக்கு நல்ல குணங்கள் வளர்ச்சியடையும். இக்காலத்து சோதனைகளும் அழுத்தங்களும் கரியிலிருந்து வைரம் உண்டாவது போல, இந்த மாம்சத்தில் உச்சிதமான குணங்கள் உண்டாகும்.

இப்படிப்பட்ட கிறிஸ்துவின் குணங்கள் அவர்களை இரக்கமுள்ள ஆசாரியர்களாக மாற்றும். அப்பொழுது அவர்கள் தங்களுடைய இராஜாவோடு இணைந்து ஒவ்வொரு மனுஷனுக்கும் நீதியை கற்பிப்பார்கள். இன்று அவர்கள் இயேசுவோடு கூட நடப்பதினால், பெறக்கூடிய அனுபவங்கள் - வருங்காலத்தில் இந்த மனுக்குலம் தேவனுக்கு இசைவான, பரிசுத்தமான வழியில் நடத்துவதற்கு பயனுள்ளதாய் இருக்கும். (ஏசாயா 35:8)

பூமிக்குரிய ஊழியத்தில் இயேசு இந்த உலகத்தை விட்டு தனித்து நின்றார். அதுபோல, அவருடைய சபையின் அங்கத்தினர்களும் இந்த உலகத்தாராய் காணப்படமாட்டார்கள். (யோவான் 17:11) இவர்கள் பூமிக்குரிய சொத்துக்களை விரும்பமாட்டார்கள். இவர்கள் இந்த உலகத்தை மேற்கொள்வதற்குப் போராடி உபத்திரவப்பட வேண்டியதை அறிந்திருக்கிறார்கள். இதன் முடிவில் பலனாகக் கிடைக்கக்கூடிய ஆசீர்வாதங்களையும், பரிசுகளையும் அறிந்திருக்கிறார்கள்.

மத்தேயு 5:3 - "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது."

மத்தேயு 5:5 - "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்."

மத்தேயு 5:11, 12 - "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே."

சங்கீதங்கள் நமக்கு ஆராக்கியத்தையும் சுபிட்சத்தையும் வாக்களிப்பதில்லை என்பதே உண்மையான பொருள். ஆனால் சகல சோதனைகளையும், உபத்திரவங்களையும் மேற் கொள்வதற்கே வாக்குத்தத்தங்கள் கொடுக்கப் பட்டிருக்கிறது. சங்கீதம் 23:4 - "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்."

ஆயிரவருட அரசாட்சியின் முடிவில் கீழ்ப்படிதலுக்கான இறுதி சோதனை முடிந்த பின் முழு மனுக்குலமும் தம்முடைய சிருஷ்டிகரின் ஞானத்தையும், வல்லமையும், அன்பையும் உணர்ந்து கொள்வார்கள். சங்கீதம் 86:12, 13 - "என் தேவனாகிய ஆண்டவரே உம்மை என் முழு இருதயத்தோடும் துதித்து, உமது நாமத்தை என்றென்றைக்கும் மகிமைப்படுத்துவேன். நீர் எனக்குப் பாராட்டின உமது கிருபை பெரியது; என் ஆத்துமாவைத்தாழ்ந்த பாதாளத்திற்குத் தப்புவித்தீர்" என்ற சங்கீதத்தில் உள்ள வார்த்தைகளை எதிரொலிப்பார்கள்.

மேன்மையான நம்பிக்கைகளில் களிக்கூறுதல்

# இரவின் கீதங்கள்



**"கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்; இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்."** (சங்கீதம் 126:3)

பொதுவாக முழு சுவிசேஷ யுகமும் பாவநிலைக் கொண்டிருக்கும் இரவுக்கு ஒப்பிடப்படுகிறது. "சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலையில் களிப்புண்டாகும்..." என்று தீர்க்கதரிசி கூறுகிறார். நீதியின் சூரியன் தன்னுடைய சுகமளிக்கும் கதிர்களை இந்த பாவமான உலகத்தில் பிரகாசித்து பாவத்தையும், மரணத்தையும் சிதறடிக்கும்! ஆயினும் இந்த இரவு நேரங்களிலும் தேவனுடைய ஜனங்கள் நம்பிக்கையற்ற ஜனங்களைப் போல துக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், தேவன் நமக்கு இரவின் கீதத்தைக் கொடுத்திருக்கிறார். யோபு 35:10 - "பூமியின் மிருகங்களைப்பார்க்கிலும் எங்களைப் புத்திமான்களும், ஆகாசத்துப் பறவைகளைப்பார்க்கிலும் எங்களை ஞானவான்களுமாக்கி,"

இவர்கள் மகிமையான விடியலில் வரும் விடுதலைக்காக நம்பிக்கையோடு விழித்திருந்து ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள். தேவன் மேல் இவர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை திரைக்கு இப்பக்கத்திலிருக்கும் தம்முடைய ஆத்துமாவின் நங்கூரமாய் இருக்கிறது. இந்த மகா இராஜாவின் பிள்ளைகள் இரவு நேரங்களில் கூட துக்கப்படுவதற்கு அவசியமென்ன? நிச்சயமாக இப்பொழுது இந்த ஆயிரவருட விடியலில்"தேவன் நம்முடைய வாயில் புதுப்பாட்டை பாட கிருபை அளித்தார்..."! ஆகவே இப்படிப்பட்ட பாடலைப் பாடி தேவனை இருதயத்தில் புகழ்ந்து பாடக்கூடியவர்களை இருளிலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைக்கப் படுகிறார்கள். ஏனெனில், இவர்களின் வாழ்க்கையின் சித்தம் சங்கீதமாகக் காணப்படுகிறது. தேவனுடைய அன்பும் அவருடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும்மற்றும் அவருடைய நன்மையும் உற்சாகமான இருதயத்தில் பெற்றிருக்கிறார்கள்.

### பூமியில் ஒருபரதேசி

நம்முடைய சத்தத்தை முழுமையாக தேவனிடத்தில் அர்ப்பணித்து சகல காரியங்களையும் அவர் மேற்பார்வையிட்டு நம்மை நடத்துகிறார் என்ற உணர்வுகள் நம்முடைய இருதயத்திற்கு இளைப்பாறுதல் அளிக்கிறது. தேவனுடைய உண்மையான பிள்ளைகள் இந்த பூமியின் மேல் பரதேசிகளாகவும், பிரயாணிகளாகவும், யாத்திரிகர்களாகவும் வசனங்கள் சித்தரிக்கிறது. இவர்கள் பரலோகத்தில் பிரவேசிப்பதற்கு எந்த தடைகளையும் அனுமதிப்பதில்லை. மாறாக, தடையாயிருக்கக் கூடிய எந்த காரியங்களையும் ஒதுக்கி வைத்து இந்த உலகத்தின் சகலவிதமான வசீகரமான காரியங்களுக்கு இடம் கொடுப்பதில்லை. இவர்கள் பரலோக குடியுரிமையைப் பெற்ற அயல் தேசத்தார். ஆகவே இந்த உலகத்தில் சிக்கலான சகல காரியங்களிலிருந்தும் தங்களைத் தாங்களே விடுவித்துக் கொள்கிறார்கள். தேவன் தாம் குறித்தக் காலத்தில் சமமற்ற சகல காரியத்தையும் சீராக்கி மனுஷர் மத்தியில் பொன்னான பிரமாணத்தை ஸ்தாபிப்பார்.

இக்காலத்து வாழ்க்கையின் அனுபவங்கள் அதனுடைய ஒரு பகுதியான போதனைகளாக எண்ணப்படுகிறது. ஏனெனில், வருங்காலத்து மகிமைகளுக்காகவும், பொறுப்புகளுக்காகவும் சிறப்பான முறையில் ஆயத்தப்படுத்தப்படுகிறார்கள். அவர் ஒவ்வொரு கடுமையான பரீட்சைகளையும் கடினமான வேதனைகளையும் ஊடுருவும் அனுபவங்களைச் சரியான முறையில் எதிர்நோக்க வேண்டும். ஏனெனில், வருங்காலத்தில் உலக ஜனங்களின் மாம்சத்தில் இருக்கும் துர்க்குணங்களை நீக்கி நீதியையும், பரிசுத்தமான சத்தியத்தையும் ஸ்தாபிக்க வேண்டும். இப்படியாக சகல காரியங்களும் நன்மைக்காக நடக்கிறது. என்ன மகிழ்ச்சி இவர்களுக்கு உண்டு.

தேவனிடத்தில் அர்ப்பணித்த அவருடைய புத்திரர்கள் நித்தியமான காரியங்களை அதிகமாகக் கற்றறிந்து நித்திய ஜீவனுக்காக தங்களுடைய காலத்தை செலவழித்து சிருஷ்டிகருக்குப் பிரியமான குணலட்சணங்களில் வளர்ச்சியடைந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுகளைப் பெறுகிறார்கள். கிறிஸ்தவர்கள் தங்களுடைய நாட்களை நிதானமாக நடத்தினாலும் அவர்கள் அதிருப்தியோடு வாழ்வதில்லை.

கடந்துபோன நாட்களில் கிடைக்கப் பெற்றுள்ள ஆசீர்வாதங்களையும், தேவனைத் துதிப்பதற்குக் கிடைத்த வாய்ப்புகள் இந்த பிரயாணத்தில்

மற்றவர்களுக்கு செய்த உதவிகள் போன்ற காரியங்களினால் மதிப்பிடுகிறார். ஒவ்வொரு நாளிலும் தேவனுடைய பார்வையில் பிரியமாய் நடப்பதற்கு ஏற்ற குணங்களில் வளர்ச்சியடைவதற்குக் கொடுக்கப்படும் வாய்ப்பாக எண்ணுகிறார்கள். - பிதாவுடைய நேசிக்கப்பட்ட குமாரனுடைய சாயலைப் பெறுவதற்காக இறுதியில் இவர்கள் மிகவும் வாஞ்சையோடு எதிர்பார்த்திருந்த தேவனுடைய இராஜ்யம் மற்றும் முதலாம் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையின் மூலம் கிடைக்கப் போகும் மகிமைகளுக்கு ஏற்ற மனநிலையைப் பெறுவார்கள். இந்த கோணத்திலிருந்து பார்க்கும் போது, தேவ ஜனங்களுடைய நாட்கள் மகிழ்ச்சியோடு கடந்து செல்கிறது. பரலோகக் குடியுரிமையைப் பெற்றவர்களிடத்தில் காணப்படும் வித்தியாசம் - இந்த உலகத்திற்கு சபை தன்னுடைய சாட்சியை நற்செய்திகளாக அறிவிப்பதற்கு மட்டுமே சிறப்புரிமைப் பெறாமல், தன்னுடைய தூய்மையினாலும் தான் இந்த உலகத்தில் தனித்து வாழ்ந்ததினாலும், தெளிவான மனநிலையோடு ஆண்டவருக்குள் ஆழமான மகிழ்ச்சிக் கொண்டவளாய் தன்னுடைய விசுவாசம் பிரகாசித்து வருங்காலத்தில் தான் பெறப்போகும் நித்தியத்தை ஆவிக்குரிய தரிசனத்தைக் கண்டதினால், இந்த மனுக்குலம் பூமி மற்றும் இவைகளில் சகலவித தற்காலிகமான காரியங்களைக் குறைத்துக் கொண்டு நித்தியமான மகிமைகளை மிகப் பெரிதாக கண் முன் நிறுத்தி எல்லா வேதனைகளையும், உபத்திரவங்களையும், காவல்களையும், மோசங்களையும் வருங்கால மகிமைகளோடு ஒப்பிட்டுப் பார்த்து இவைகளை இலேசாக எண்ணுகிறார்கள்.

தேவனுடைய பிள்ளைகளின் நிலை இந்த உலகத்தில் தனித்து காணப்படுகிறார்கள். இவர்கள் இந்த உலகத்தில் வாழ்ந்தாலும், இவர்கள் உலகத்தார் அல்ல. இவர்கள் சகல ஜனங்களோடு கலந்து அனைவரும் பெறக்கூடிய பொதுவான அனுபவங்களைக் கற்றாலும், இவர்களின் வாழ்க்கை தனித்து காணப்படுகிறது.

இவர்களுடைய பரலோகக் குடியிருப்பை மற்றவர்களைக் காட்டிலும் வித்தியாசமாகக் காணப்படுகிறது. வாழ்க்கையிலுள்ள கசப்பான சோகங்களைத் திருடிச் செல்வதற்கு வல்லமைப் பெற்றிருக்கிறார்கள். ஆனாலும், பூமிக்குரிய மகிமைகளையும் நன்மைகளாயும் இழக்க நேரிடும். மற்றவர்களால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு, தவறாக எண்ணப்படுகிறார்கள். ஆயினும் இவைகள் அனைத்தும் மிக விலையுயர்ந்த மதிப்பைப் பெறக்கூடிய ஆசீர்வதிக்கப்பட்ட அடையாளங்களாகும். 2 கொரிந்தியர் 6:9, 10 - "அறியப்படாதவர்களென்னப்பட்டாலும் நன்றாய் அறியப்பட்டவர்களாகவும், சாகிறவர்கள் என்னப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும், தண்டிக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் கொல்லப்படாதவர்களாகவும், துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும், சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம்."

"உலகத்தின் பார்வைக்கு தேவனுடைய சபையாக இந்த பூமியின் மேல் காட்சியளிப்பதில்லை. அவள் தரித்திரராய் இராத போதிலும் தரித்திரனைப் போல் தோன்றுகிறாள். அவள் இராஜாவின் மணவாட்டியாக இருந்தாலும் அப்படிப்பட்ட தோற்றத்தில் அவள் காணப்படுவது இல்லை. ஏனெனில், அவளுடைய ஆண்டவரும் இவ்வுலகத்தில் வாழ்ந்தார். அவர் மனுஷர் சிந்தித்தப்படி இருக்கவில்லை. பனிக்காலத்தில் காணப்படும் மரம், அதின் உண்மையான தோற்றத்தில் வெளிப்படுவதில்லை. அது மரித்து காய்ந்ததுபோல் காட்சியளித்தாலும் அதின் வேர்களும் கிளைகளும் முழுமையாக ஜீவித்துக் கொண்டே இருக்கிறது. எல்லாவிதமான புயலிலும் பனியிலும் அவைகள் எந்த மாற்றங்கள் இல்லாமல் காணப்படுகிறது. தொடர்ந்து வரும் வெயில் காலத்திலும் இந்நிலை காணப்படுகிறது. அவைகள் துளிர்த்துப் பூத்துக் குலுங்க வசந்த காலத்தை எதிர் நோக்கியிருக்கிறது. அதேபோல, சபையானவளும் இந்த குளிரான இரவில் அவளுடைய உண்மையான தோற்றம் காட்சியளிக்கப்படாமல் அல்லது இவளைப்பற்றிய உண்மைகள் ஒருவரும் அறியமுடியாத அளவிற்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார். முடிவில் இவள் பெறும் மகிமைகள் தேவனிடத்தில் பத்திரப்படுத்தப்பட்டுள்ளது."

அன்று சபையைக் குறித்த ஒரு வர்ணனையை விவரிக்கிறார். ஆகவே நாம் ஒவ்வொருவரும் மகிமையான நிலையை அடைவதற்கு உண்டான வளர்ச்சியில் தொடர்ந்து முன்னேறுவோம்.

### தீர்க்கதரிசனத்தில் இன்று

# ஐரோப்பாவில் இன்னல்

"வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்; ஆதலால் பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம்." (லூக்கா 21:26)

"இந்த நெருக்கடியிலிருந்து தீர்வு காண எந்த ஒரு மந்திரவெடிகுண்டும் இல்லை, மேலும் இந்த பலமான கடன் கொல்லையிலிருந்த திடீரென்று விடுதலை அளிக்க யாராலும் இயலாது." Morning Star என்ற சுதந்திர முதலீட்ட ஆராய்ச்சி நிறுவனம், ஐரோப்பா எதிர் நோக்கி கொண்டிருக்கும் சூழ்நிலையைப் பற்றி ஜூலை 2012 தமது பத்திரிக்கையில் வெளியிட்ட செய்தி, ஐரோப்பாவின் வரலாற்றில் இந்த நிகழ்வு ஒரு ஆழமான நெருக்கடி என்று பேராசிரியர் பிரிஜீட் லாஙபான் கூறுகிறார். இந்த சூழ்நிலையை சமாளிக்க ஐரோப்பாவால் முடியவில்லை என்றால் ஐரோப்பா தேசம் முழுவதும் சீர்குலைந்து போய்விடும் என்றும் டூபிலின் கல்லூரின் பல்கலைக்கழகத்திலிருந்து பேராசிரியர் பிரிஜீட் லாஙபான் கூறுகிறார்.

மேலும் ஆராய்ச்சிகள் மேற்கொண்டதில் இன்னும் இரண்டு ஆண்டுகள், ஆனால் இந்த சூழ்நிலை மாறாது என்று 70 % ஜனங்கள் கூறுகிறார்கள்.

**ஐரோப்பாவின் ஒற்றுமை பற்றின வரலாறு**

இரண்டாம் உலகப் போருக்கு பின்பு, அழிந்துக்கொண்டிருந்த ஐரோப்பிய நாடுகள், சமாதானத்திற்காகவும், பொருளாதாரத்தில் வளர்ச்சி அடையவும் பல திட்டங்கள் தீட்டினார்கள்.

* 1950 - அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பல திட்டங்கள் தீட்டப்பட்டது. ஆனால் கிழக்கிற்கும் மேற்கிற்கும் நடுவில் நடந்த போரில் இந்த முயற்சி பலன் அளிக்கவில்லை.

*1957 - ரோம் உடன் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலமாக பொது சந்தை என்று கூறப்படும் ஐரோப்பிய பொருளாதார சங்கங்கள் உருவாக்கப்பட்டது.

*1960 - ஐரோப்பிய ஐக்கிய நாடுகள் என்று வழங்கப்படும், பொது சந்தை நாடுகள், தங்களுக்குள் நடக்கும் வியாபாரத்தின் வரிகளை விளக்கின உணவு உற்பத்தியை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து எல்லோருக்கும் நிறைய உணவு என்ற முடிவிற்கு வந்தனர். விரைவில் உணவு உற்பத்தி தேவைக்கு மேல் அதிகரித்தது.

*1973 - ஐரோப்பிய ஐக்கிய நாடுகளுடன் டென்மார்க், ஐயர்லாந்து, மற்றும் அமெரிக்கா இணைந்தன. இவை சேர்ந்தவுடன் பொது சந்தையின் நாடுகள் 9 ஆக உணர்ந்தது. ஆனால் அக்டோபர் 1973ல் இஸ்ரயேல் - அரப், யோம் கிப்பூர் போரின் பலனாக ஐரோப்பாவின் எரிசக்தி நெருக்கடி மற்றும் பொருளாதாரம் சரிந்தது.

* 1974- 1975 போர்ச்சுகலில் சாலாசாரின் ஆட்சி கவிழ்கப்பட்டதாலும், ஸ்ப்பானிய நாட்டில் ஜெனரெல் பிரான்ஸின் மரணத்தாலும் ஐரோப்பாவில் வால்லாட்சி நிறைவுக்கு வந்தது. வறுமை நிறைந்த மாநிலங்களில் வேலை வாய்ப்புகளை அதிகரிக்க ஐக்கிய ஐரோப்பா மிகப் பெரிய அளவில் பணங்களை இடமாற்றம் செய்தது.

*1979 - ஐரோப்பிய பாராளுமன்றம், Europe Union ளின் 10வது உறுப்பினராக சேர்கிறது. அதை தொடர்ந்த 5 வருடம் கழித்து ஸ்பானியா மற்றும் போர்ச்சுகல் இணைகிறது. இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் நெருக்கடிக்கு முக்கிய காரணமே இந்த நாடுகள் தான்.

*1986 - தனித்தன்மை வாய்ந்த ஐரோப்பிய சட்டம் (Single European Act) கையெழுத்தாகிறது. இந்த சட்டம் இலவச வியாபார சந்தை உருவாக முக்கிய காரணமாய் இருந்தது. ஆனால் 1989ம் வருடம் பெர்லின் சுவர் வீழ்ந்ததின் காரணமாக இது செயல்படுத்த முடியாமல் போனது. ஜெர்மனியில் அரசியல் கிளர்ச்சி உண்டாகி கிழக்கு மற்றும் மேற்கு ஜெர்மனி 28 வருட பிரிவினைக்கு பின்பு ஒன்று சேர்கிறது.

* 1993 - மக்கள், பணிகள், மற்றும் சாமான்கள் ஐரோப்பிய தேசம் முழுவதும் பொருளாதாரம் இங்கும் அங்கும் இடம் மாறி கொண்டிருந்ததால், எல்லா இடத்திலும் ஒரே நாணயம் யூரோ என்ற திகழ ஆரம்பித்தது. 1993 செய்து கொண்ட மாஸ்டிரிட்ச்ட்டு (Maastricht) என்னும் உடன்படிக்கை மற்றும் 1999ல் அம்ஸ்ட்டர்டாம் (Amsterdam) உடன் செய்து கொண்ட உடன்படிக்கை இவை இரண்டும் Europe Union யை மிகவும் திடமாக்கியது.

* 2004-2007 - கிழக்கு மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு இடையே திகழ்ந்த அரசியல் திருப்பங்கள் நிறைவுற்று மேலும் 12 புது நாடுகள் Europe Union யை சேர்கின்றன.

பொருளாதாரத்தில் இலாபம் அடைந்திருந்தாலும், ஐரோப்பிய நாடு இன்றும் அரசியலில் ஒற்றுமையை கொண்டு வர முடியவில்லை. இதன் காரணமாக பொருளாதாரத்தின் சரிவை கட்டுப்படுத்தும் பொழுது, அரசியலில் நடக்கும் சிறு சிறு பிரச்சனைகள் கூட பெரும் நெருக்கடியாக உருவகப்படுத்தப்படுகிறது. பொருளாதராத்தில் முதன்மையாக விளங்கி கொண்டிருக்கும் உருப்பின நாடாகிய அமெரிக்க மற்றும் சீனாவைப் போல், அவர்களிடையே ஒரே மாதிரியான வாழ்க்கை நிலைமையே மற்றும் மொழியோ இல்லாத காரணத்தினால் அவர்களை ஒன்று சேர்ப்பது என்பது மிகவும் கடினமான காரியமாய் உள்ளது. நூறு ஆண்டுகளுக்கு மேலாக மொழியும் பழக்கவழக்கமும் தனித்தனியாக உள்ளதால் ஐரோப்பா தேசம் இன்றும் ஒற்றுமை இல்லாமல் பிரிந்து கிடக்கிறது.

**இன்னும் செழுமையான உலகமா ?**

உலகின் பொருளாதாரம் சரிவதற்கு இன்னும் பல நாட்கள் இருப்பது போல் காட்சியளித்தாலும் வேதம் தொடர்ந்து வரப்போகும் நெருக்கடியை எதிர்பார்க்க வேண்டும் என்று கூறுகிறது. (சங் 82:5) ஐரோப்பிய ஐக்கிய நாடுகளின் இறுதி நிலை என்ன என்று இன்னும் எழுதப்படவில்லை. ஐக்கிய நாடுகளில் பெடரல் ரீசர்வ் வங்கியின் முன்னாள் தாளாளர் ஆலன் கிரீன் ஸ்பான் இவ்வாறு கூறுகிறார் -"தெளிவாக, நாம் ஒருங்கிணைக்கப்பட்ட உலகில் தான் வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம். காலப்போக்கில் பொதுவாக நாம் இன்னும் இசைந்து வாழுவோம்"

**யூரோ என்ற நாணயம் தோன்றிய பிறகு கீழே கூறப்பட்டவை எதிர்ப்பார்க்கப்பட்டது -**

* ஐரோப்பிய தேசத்தின் எல்லைகளில் நாணயத்தினால் ஏற்பட்ட இடர்கள் விலகியதால் ஐரோப்பா தேசத்தின் சந்தைகள் வருங்காலத்தில் விரைவில் வளர ஆரம்பிக்கும்.

*அமெரிக்காவின் டாலருடன் சேர்ந்து யூரோவும் உலகின் இரண்டாவது நாணயமாய் நிலைத்து நிற்கும். 290 மில்லியின் ஐரோப்பிய மக்கள் உலகச் சந்தையிலும், பொருளாதார பெருகத்திற்கும் இதனை பயன்படுத்துவதால் இவ்வாறு எதிர்ப்பார்க்க படுகிறது.

இன்று உலக பொருளாதாரத்தின் உறுதியற்ற நிலையை ஒப்பிட்டு பார்க்கையில், 1999 ஐரோப்பாவை பற்றி கூறப்பட்ட சில கருத்துக்களின் முடிவுகள் சற்று எதிர் மறையாக முடியும் என்று தோன்றுகிறது. அர்மகேதோன் யுத்தத்திற்காக தேசங்கள் அனைத்தும் ஒன்றாக திறண்டு கொண்டிருக்கும் நேரத்தில் வேதம் இவ்வாறு கூறுகிறது. "ஆகையால் நான் கொள்ளையாட எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; என் சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம்பண்ணினேன்; பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும். " (செப் 3:8)

மிகவும் சக்தி வாய்ந்த நாடுகள் அதிகாரம் செலுத்திய காலம் முடிந்து விட்டது. கீழே மற்றும் மேலே உள்ளோரையும் ஒன்று திரட்ட வேண்டும் என்ற சரித்திரத்தின் முயற்சி, இந்த உலகை இன்னும் நிலையற்றதாக மாற்றி கொண்டிருக்கிறது. "சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்; பூமியின்மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்; சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும் " (லூக் 21:25) என்று கர்த்தர் கூறுகிறார். சிரேக்க மொழியில் குழப்பம் என்பதற்கு "வெளியே செல்ல வழியில்லை, நஷ்டத்தில் இருப்போன்" என்று பொருள்படும். வேறு ஒரு இடத்தில் "ஒருவனும் கோடித்துண்டைப் பழைய வஸ்திரத்தோடே இணைக்கமாட்டான்; இணைத்தால், அதினோடே இணைத்ததுண்டு வஸ்திரத்தை அதிகமாய்க் கிழிக்கும், பீறலும் அதிகமாகும். " (மத் 9:16) என்று கர்த்தர் கூறுகிறார்

நிரந்தரமான சமாதானத்தையும், செல்வத்தையும் எந்த ஒரு பொருளாதார அமைப்பாலும், பல விதமான அரசாங்க அமைப்பாலும் உறுதிசெய்ய முடியவில்லை. நாமும் இன்று அந்த மாதிரியான முயற்சிகளை அனுபவித்து கொண்டு இருக்கிறோம். தேவனுடைய இராஜ்யத்தில் அமைப்புகள் - அதாவது சமுக நிர்வணங்கள், மதம், பொருளாதாரம், அரசியல் அமைப்புகள் எல்லாம், எல்லா மக்களும் பயனடையும் அமைப்புகளாய் மாற்றி அமைக்கப்படும். "தெக்கேல் என்பதற்கு, நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டாய் என்றும்," (தானி 5:27)

அர்மகெதோனின் இறுதி போர் இந்த அமைப்புகளை எல்லாம் கரைத்துவிடும். கர்த்தரின் பிரசன்னம் எல்லா மனிதனையும் இராஜ்யத்தை நோக்கி நடத்தி செல்லும். "சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவேன், சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்; இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (ஆகாய் 2:7)

தன்னுடைய இராஜ்யத்திற்காக தேசத்தை ஆயத்தப்படுத்த தேவன் தேசங்களை குலுக்கிக் கொண்டு இருக்கிறார். தேவனுயைட பிரசன்னத்தில் எல்லா மனிதனும், சமாதானத்தையும் சமநிலையையும், நித்திய வாழ்விற்கான வாய்ப்பையும் அனுபவித்து கொண்டிருப்பான். சங்கீதகாரரின் இந்த வார்த்தைகள் நமக்கு உற்சாகம் அளிக்கட்டும். "பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்; ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுதுகொள்ளும். ராஜ்யம் கர்த்தருடையது; அவர் ஜாதிகளை ஆளுகிறவர்." (சங் 22 :27-28)

**சங்கிலியாண்டபுரம் வேத மாணவர்கள்,**

**திருச்சி.**

**Cell : 9244611241, 8122224919**